ISSN: 2582-5518




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ பிப்ரவரி. 26, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 139 ❖ ரூ.10

### மாதம்தோறும் வானொலியில் பிரதமர் மோடி பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி

# 'மனதின் குரல்'

## தேர்தல் காலத்தை முன்னிட்டு மூன்று மாதங்களுக்கு கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது

புதுடெல்லி, பிப். 26-

**மனதின் குரல் என்ற தலைப்பில் மாதம்தோறும் வானொலியில் பிரதமர் மோடி பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி தேர்தல் காலத்தை முன்னிட்டு மூன்று மாதங்களுக்கு கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.**



மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் மனதின் குரல் (மன் கி பாத்) எனும் வானொலி நிகழ்ச்சி மூலம் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்காக உரையாற்றி வருகிறார். அதன்படி இந்த பிப்ரவரி மாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமையான நேற்று தனது 110 வது மனதில் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றினார்.

அவர், "மார்ச் 8 ல் பெண்கள் தினத்தை நாம் கொண்டாட உள்ளோம். நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் பெண்களின் பங்களிப்புக்கு மரியாதை செய்ய இந்த நாள் சிறப்பான நாள் ஆகும். பெண்களுக்கு சம வாய்ப்பு கிடைத்தால் மட்டுமே உலகம் வளர்ச்சி பெறும் என மகாகவி பாரதியார் கூறியுள்ளார். இந்தியாவில் பெண்கள் சக்தியானது அனைத்து துறைகளிலும் உச்சத்தை எட்டியுள்ளது. கிராமங்களில் இருக்கும் பெண்களால்டிரோன்களை இயக்க முடியுமா என்ற கேள்வி எழுந்தது அதுவும் இன்றைக்கு சாத்தியமாக்கி இருக்கிறது.

இயற்கை விவசாயம், நீர் சேகரிப்பு மற்றும் தூய்மைப் பணிகளில் பெண்களின் தலைமைப் பண்பு வெளியாகி உள்ளது. நமது பூமியை காப்பதில் பெண்களின் சக்தி முக்கிய பங்கு வகிக்கிறது. எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் புதிய வாக்காளர்கள் முதல் முறையாக தங்கள் வாக்குகளை கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். தங்கள் கனவுகளை நனவாக்க இளைஞர்கள் தவறாமல் வாக்களிக்க வேண்டும்.

தேர்தலை முன்னிட்டு அடுத்த மூன்று மாதங்களுக்கு மனதில் குரல் நிகழ்ச்சி நடைபெறாது. மீண்டும் பாஜக ஆட்சி வந்த உடன் 111வது நிகழ்ச்சியாக மனதின் குரல் மீண்டும் தொடங்கும்" என்று பிரதமர்மோடி பேசினார்.

# தூத்துக்குடியில் மின் வாகன தொழிற்சாலை முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்

தூத்துக்குடி, பிப். 26-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பொறுப்பேற்றது முதல் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் பொருட்டு புதிய தொழிற்சாலைகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக தென் மாவட்டங்களில் உள்ள சிப்காட் பகுதிகளில் தொழில் வளங்களை பெருக்கி அதன்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறார்.




நெல்லை, தூத்துக்குடி சிப்காட் பகுதிகளில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படுகிறது. சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் உலகின் பல்வேறு முன்னணி நிறுவனங்களுடன் தமிழக அரசு சார்பில் தொழிற்சாலைகள் தொடங்க ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த வகையில் தென் மாநிலத்தில் முதல் முறையாக தூத்துக்குடியில் முதல் மின் வாகன தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. இந்த நிறுவனத்தை வியட்நாமை சேர்ந்த பிரபல நிறுவனமான வின் பாஸ்ட் தொடங்க உள்ளது.

இதற்காக தூத்துக்குடி சில்லாநத்தம் சிப்காட் வளாகத்தில் 400 ஏக்கர் நிலபரப்பில் மின் கார் உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. இந்த தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு 1½ லட்சம் மின் வாகனங்கள் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ.16 ஆயிரம் கோடி முதலீட்டில் தொடங்கப்படும் இந்த தொழிற்சாலையில் முதற்கட்டமாக 3,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்த புதிய மின் கார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு விழா தூத்துக்குடி சில்லா நத்தத்தில் நேற்று பிரமாண்டமாக நடைபெற்றது.

இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு புதிய கார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். விழாவில் சபாநாயகர் அப்பாவு, கனிமொழி எம்.பி., அமைச்சர்கள் டி.ஆர். பி.ராஜா, கீதாஜீவன், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், தங்கம் தென்னரசு, கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், மனோ தங்கராஜ், ராஜ கண்ணப்பன், ஞானதிரவியம் எம்.பி., வின்பாஸ்ட் நிறுவனத்தின் இந்தியாவுக்கான தலைமை செயல் அலுவலர் பாம்சான் சவு, துணை தலைமை செயல் அலுவலர் பார்த்தா டட்டா, கலெக்டர் லட்சுமிபதி, சிப்காட் நிர்வாக இயக்குனர் செந்தில்ராஜ் மற்றும் மேயர் ஜெகன் பெரியசாமி, எம்.எல்.ஏ.க்கள் மார்கண்டேயன், சண்முகையா, ஊர்வசி அமிர்தராஜ் மற்றும் அரசு அதிகாரிகள், தி.மு.க.வினர் திரளாக கலந்து கொண்டனர்.

பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து கார் மூலம் புதுக்கோட்டை சூசைபாண்டியாபுரம் பகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டார். அப்போது கடந்த டிசம்பர் மாதம் நெல்லை, தூத்துக்குடியில் பெய்த கனமழையால் வீடுகளை இழந்தவர்கள், வீடு சேதம் அடைந்தவர்கள், படகுகள் சேதம் அடைந்த மீனவர்கள் என 16 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த விழாக்களில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை விமானம் மூலம் தூத்துக்குடி வந்தார். வாகைகுளம் விமான நிலையத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பிலும், அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமையிலும் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இதே போல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விமான நிலையத்தில் இருந்து விழாக்கள் நடைபெற்ற பகுதிகளுக்கு செல்லும் வழியில் சாலைகளில் இருபுறமும் தி.மு.க.வினரும், பொதுமக்களும் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு கொடுத்தனர். முதலமைச்சரை வரவேற்கும் விதமாக தூத்துக்குடி முழுவதும் தி.மு.க. கொடிகள், தோரணங்கள் வைக்கப்பட்டு நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. மேலும் முதலமைச்சர் வருகையையொட்டி தூத்துக்குடி முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# மார்ச் 1-ல் சென்னையில் நட்சத்திரப் பேச்சாளர்கள் ஆலோசனைக் கூட்டம் - அதிமுக அறிவிப்பு

சென்னை : பிப். 26-

அதிமுக தலைமைக்கழக பேச்சாளர்கள் மற்றும் நட்சத்திரப் பேச்சாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் மார்ச் 1ம் தேதி சென்னையில் நடைபெற உள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.



இதுதொடர்பாக அதிமுக தலைமை விடுத்துள்ள அறிக்கையில், "நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை மகத்தான வெற்றி பெறச் செய்திடும் வகையில், தேர்தல் பரப்புரையை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து "தலைமைக் கழக நட்சத்திரப் பேச்சாளர்கள், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் ஆலோசனைக் கூட்டம்'' வருகின்ற மார்ச் 1ம் தேதி - வெள்ளிக் கிழமை காலை 10 மணியளவில், சென்னை எழும்பூரில் உள்ள "ஓட்டல் இம்பீரியல் சிராஜ் மஹாலில்" (எழும்பூர் ரயில் நிலையம் அருகில்) நடைபெற உள்ளது.

தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக நட்சத்திரப் பேச்சாளர்கள், சிறந்த மேடைப் பேச்சாளர்கள் பங்கேற்று, அதிமுக ஆட்சிகளில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு முத்தான திட்டங்களையும்; திமுக ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மை காரணமாக மக்கள் அன்றாடம் சந்தித்து வரும் இன்னல்களையும்; திமுக அரசு மக்களுக்கு இழைத்து வரும் பல்வேறு துரோகங்களையும் பட்டிதொட்டியெங்கும் வாழும் மக்களிடம், தேர்தல் பரப்புரை மூலம் எவ்வாறு கொண்டு செல்ல வேண்டும் என்பது குறித்து விரிவாக ஆலோசனை வழங்க உள்ளார்கள்." என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் வகையில், தலைமைக் கழக நட்சத்திரப் பேச்சாளர்கள், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் அனைவருக்கும் தனித் தனியே அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தலைமைக் கழக நட்சத்திரப் பேச்சாளர்கள், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் அனைவரும் தங்களுக்குரிய அழைப்பிதழோடு தவறாமல் வருகை தந்து, ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

# சென்னை மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகங்களில்

# நிதி நெருக்கடியை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - ஓ.பன்னீர்செல்வம்

சென்னை : பிப். 26-

எதிர்கால மாணவ, மாணவியரை உருவாக்கும் பல்கலைக்கழகங்கள் மோசமான நிதிநிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது கண்டனத்திற்குரியது என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.



முன்னாள் முதல் - அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்து இருப்பதாவது:- இளைய சமுதாயத்தினருக்கு அறிவு, ஒழுக்கம், உயர் கல்வி ஆகியவற்றை தரக் கூடியவையாகவும், ஆய்வினை மேற்கொள்ளக் கூடியவையாகவும், பொது நலப் பணிகளில் மாணவ, மாணவியரை ஈடுபடுத்தக் கூடியவையாகவும், வேலைவாய்ப்பினை உருவாக்கித் தரக் கூடியவையாகவும் விளங்குபவை பல்கலைக்கழகங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், இளையசமுதாயத்தினரின் விடிவெள்ளியாக விளங்குபவை பல்கலைக்கழகங்கள். இப்படிப்பட்ட பல்கலைக்கழகங்களே பாதிக்கும் சூழ்நிலை கடந்த மூன்று ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் உருவாகியுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக விளங்குவது மதுரை காமராசர் பல்கலைக்கழகம். கடந்த இரண்டு மாதங்களாக அங்கு பணியாற்றும் அலுவலர்களுக்கு சம்பளம், ஓய்வூதியம் கூட வழங்கப்பட முடியாத அவல நிலை நிலவுவதாகவும், இதனைக் கண்டித்து கடந்த பத்து நாட்களாக அனைத்துத் துறை அலுவலகங்களையும் பூட்டி நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் போராடி வருவதாகவும், ஏற்கெனவே நிதிப் பற்றாக்குறையை சுட்டிக்காட்டி நூற்றுக்கணக்கான தற்காலிக ஊழியர்கள் வெளியேற்றப் பட்டதாகவும், தற்போது நடைபெறும் போராட்டம் காரணமாக மாணவ, மாணவியரின் கல்வி கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளதாகவும், மாணவ, மாணவியருக்கான சான்றிதழ் வழங்கும் பணிகள் முடங்கிப் போயுள்ளதாகவும் தகவல்கள் வருகின்றன.

மொத்தத்தில், மாதச் சம்பளமும், ஓய்வூதியமும் வழங்க இயலாத நிலைக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் சென்றுள்ளது. இதேபோன்று, சென்னை பல்கலைக்கழகத்திற்கு தரவேண்டிய 51 விழுக்காடு நிதியில், 20 விழுக்காட்டிற்கும் குறைவான நிதியை மட்டும் தி.மு.க. அரசு விடுவித்துள்ள நிலையில், பிப்ரவரி மாத சம்பளமே கொடுக்க முடியாத சூழ்நிலை சென்னை பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டுள்ளது. தி.மு.க. அரசின் நிர்வாகத் திறமையின்மைக்கு இவையெல்லாம் எடுத்துக்காட்டுகள். ஊதியத்தைக் கூட கொடுக்கஇயலாத அரசாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஆவின் நிறுவனத்தில் குளறுபடி, அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் குளறுபடி, அரசு போக்குவரத்துக் கழகங்களில் குளறுபடி, பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களில் குளறுபடி என்ற வரிசையில் தற்போது சென்னை மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றின் மூலம், கல்வியில் அக்கறை இல்லாத அரசாக தி.மு.க. அரசு விளங்குகிறது என்பது தெளிவாகிறது. இதே நிலைமைதான் மற்ற பல்கலைக்கழகங்களிலும் நீடிப்பதாக தகவல்கள் வருகின்றன. பல்கலைக் கழகங்களுக்கான பல்வேறு கட்டணங்கள் கடந்த மூன்று ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்பட்டும், நிதி நிலைமை மோசமாக இருப்பது வேதனைக்குரிய செயல். பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளதாக தனக்குத் தானே கூறிக்கொள்ளும் தி.மு.க. அரசு, எதிர்கால மாணவ, மாணவியரை உருவாக்கும் பல்கலைக்கழகங்களை மோசமான நிதிநிலைமைக்கு தள்ளியுள்ளது கடும் கண்டனத்திற்குரியது. ஒருவேளை அனைத்தையும் அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்வதுதான் 'திராவிட மாடல்' போலும்!

சென்னை மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகங்களில் நிலவும் நிதிப் பற்றாக்குறையினை போக்கிடும் வகையில், உரிய நிதியையும், மானியத்தையும் உடனடியாக வழங்கி, அங்குள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மாதந்தோறும் சம்பளம் பெறவும், ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியத்தை பெறவும், மாணவ, மாணவியர்கள் பாதிப்பிலிருந்து விடுபடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று முதல் - அமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்து உள்ளார்.

# போதைப்பொருள் கடத்தலில் தொடர்புடைய திமுக பொறுப்பாளர் மீது நடவடிக்கை எடுக்க அண்ணாமலை வலியுறுத்தல்

சென்னை : பிப். 26-

திமுகவில் முக்கியப் பொறுப்பில் இருக்கும் ஒருவரே, இத்தனை ஆண்டுகளாக சென்னையில் இருந்து கொண்டு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்திருப்பது, பலத்த சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. எனவே, உடனடியாக தமிழக அரசு போதைப் பொருள் கடத்தலில் தொடர்புடைய அனைவரையும் கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், "டெல்லியில், சுமார் 2,000 கோடி மதிப்புள்ள போதைப் பொருள்களைக் கடத்த முயன்ற கும்பல், போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளது. விசாரணையில், இவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இந்தக் கும்பலின் தலைவனாகச் செயல்பட்டவர், திமுகவின் சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஜாஃபர் சாதிக் என்பதும், அவரது சகோதரரான, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மத்திய சென்னை மண்டல துணைச் செயலாளர் முகமது சலீம் மற்றும் மைதீன் ஆகியோர் அவருக்குத் துணையாகச் செயல்பட்டதும் தெரிய வந்துள்ளது.


இவர்கள், கடந்த மூன்று ஆண்டுகளில், சுமார் 3,500 கிலோ போதைப் பொருள்களை, 45 முறை வெளிநாடுகளுக்கு அனுப்பியிருக்கலாம் என்றும் அதன் மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் பணத்தை, போதைப் பொருள்கள் மூலம் இவர்கள் சம்பாதித்திருக்கலாம் என்பதும் தெரிய வந்துள்ளது.

போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் தேடப்பட்டுவரும் திமுகவின் சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஜாஃபர் சாதிக் என்பவர், இந்தப் பணத்தை, தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தியுள்ளதும், மேலும் போதைப் பொருள்கள் கடத்தல் மூலம் கிடைத்த லட்சக்கணக்கான பணத்தை, முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஆகியோரிடம், தமிழக அரசு நிவாரண நிதியாக வழங்கியுள்ள புகைப்படங்களும், அமைச்சர் சேகர்பாபுவுடன் இருக்கும் புகைப்படங்களும், மற்றொரு தேடப்படுபவரான, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மத்திய சென்னை மண்டல துணைச் செயலாளர் முகமது சலீம் என்பவர், விசிக தலைவர் திருமாவளவன் அவர்களிடம் கட்சி நிதி வழங்கியுள்ள புகைப்படங்களும், சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. மேலும், தமிழ்த் திரைத் துறையில் பல இயக்குநர்கள் மற்றும் நடிகர்களுடன் இவர்கள் நெருங்கியத் தொடர்பில் இருக்கும் புகைப்படங்களும் வெளியாகியிருக்கின்றன.

திமுக ஆட்சிக்கு வந்ததில் இருந்தே, தமிழகத்தில் போதைப் பொருள்கள் நடமாட்டம் அதிகம் இருப்பதையும், பள்ளி மாணவர்கள் வரை, போதைப் பொருள்களின் தாக்கம் பரவியிருப்பதையும், தமிழகத்தில் போதைப் பொருள்கள் பரவலாகக் கிடைத்து வருவதாக ஊடகங்களில் வரும் செய்திகளையும், தமிழக பாஜக சார்பாக எடுத்துக் கூறி, கடுமையான நடவடிக்கைகள் எடுக்குமாறு திமுக அரசை பல முறை வலியுறுத்தியும், இதுவரை உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை. தற்போது, திமுகவில் முக்கியப் பொறுப்பில் இருக்கும் ஒருவரே, இத்தனை ஆண்டுகளாக சென்னையில் இருந்து கொண்டு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்திருப்பது, பலத்த சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது.

இந்தச் சந்தேகங்கள் மேலும் வலுப்படுவதைத் தவிர்க்கவும், போதைப் பொருள்கள் புழக்கம், நமது நாட்டின் மீது தொடுக்கப்படும் போர் என்பதை மனதில் கொண்டும், உடனடியாக தமிழக அரசு போதைப் பொருள்கள் கடத்தலில் தொடர்புடைய அனைவரையும் கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக பாஜக சார்பாக வலியுறுத்துகிறேன், என்று அண்ணாமலை பதிவிட்டுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

" உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்."






# "வரும் நாடாளுமன்றத் தேர்தலில் உறுதியாக இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவோம்" : ஓபிஎஸ்

புதுச்சேரி : பிப். 26-

எடப்பாடி பழனிசாமி தரப்பு போட்டியிடும் அனைத்து தொகுதிகளிலும் டெபாசிட் இழக்கும் என்று தமிழக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்தார். இரட்டை இலை சின்னத்தை பெற தேர்தல் ஆணையத்தை தொடர்ந்து தொடர்பு கொண்டு பேசி வருகிறோம் என்றும் அவர் கூறினார்.



திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்க புதுச்சேரி வந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "வரும் நாடாளுமன்றத் தேர்தலில் உறுதியாக இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவோம். நாங்கள் பாஜக கூட்டணியில் தொடர்ந்து பத்து ஆண்டுகளாக இருக்கிறோம். இதுவரை தீர்ப்புகளும் முதலில் இருந்து தற்போது வரை எடப்பாடி பழனிசாமிக்கு வந்தவை தற்காலிக தீர்ப்புகள்தான். சிவில் சூட்டில் கவனித்து கொள்ள உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளதால், முன்னதாக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புகள் பொருந்தாது.

தற்போதுள்ள நிலையிலும் எடப்பாடி பழனிசாமியை யாரும் நம்பத் தயாராக இல்லாத சூழல் அரசியலில் ஏற்பட்டுள்ளது. நல்லது செய்தவர்களுக்கு நன்றியில்லாமல் நடந்ததால் கட்சிகள் அவரை நாடுவதில்லை. அதனால் அவரை தவிர்க்கிறார்கள். எத்தனை தொகுதியில் போட்டி என்பதை இறுதி செய்த பிறகு அறிவிப்போம். நாங்கள் அமமுக பொதுச்செயலர் தினகரனும் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

மீண்டும் எடப்பாடி பழனிசாமியுடன் சேரும் வாய்ப்பு இல்லை. முதலில் விமர்சனம் செய்து எடப்பாடி அணி. அதற்கு பதில்தான் அண்ணாமலை தருகிறார். இரட்டை இலை சின்னத்தை பெற தேர்தல் ஆணையத்தை தொடர்ந்து தொடர்பு கொண்டு பேசிக்கொண்டிருக்கிறோம். எடப்பாடி போட்டியிடும் அனைத்து தொகுதியிலும் டெபாசிட் இழக்கும்" என்று ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

# "மக்களவை தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை" : சீமான் அறிவிப்பு

திருச்சி : பிப். 26-

மக்களவை தேர்தலில் நான் போட்டியிட போவதில்லை என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.



திருச்சியில் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக வந்த நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களைச் சந்தித்து பேசினார். அப்போது வரும் மக்களவை தேர்தலில் போட்டியிடுவது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்து பேசிய சீமான், "மக்களவை தேர்தலில் நான் போட்டியிட போவதில்லை. தனித்து போட்டி என்று ஏற்கனவே நாங்கள் அறிவித்துவிட்டோம். எனினும், கூட்டணி அமைக்க சிலர் எங்களிடம் பேசியது உண்மைதான். ரகசியமாகப் பேசினார்கள். அவர்கள் ரகசியமாகப் பேசியதை பொதுவெளியில் சொல்வது மாண்பாக இருக்காது. கூட்டணி பேசியதை எல்லாம் எங்கள் மன்னார்குடியில் கூப்பிட்டார்கள் என பொதுவெளியில் சொல்லிக்கொண்டா இருக்க முடியும்.

வாக்கு இயந்திரத்தில் தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளது. இந்தியா, நைஜீரியா, வங்கதேசம் தவிர உலகின் எந்த நாடுமே வாக்கு இயந்திரங்கள் முறையை பயன்படுத்தவில்லை. அதிலும் கடந்த தேர்தலில் வாக்குப் பதிவு இயந்திர முறையை வங்கதேசம் கைவிட்டுவிட்டது. ஆனால், ஊழலில் பெருத்து திளைத்த நாடுகள் இந்தியாவும், நைஜீரியாவும்.

வாக்குப் பதிவு இயந்திரத்தை தயாரித்த தரும், ஜப்பானே அந்த இயந்திரத்தை பயன்படுத்துவதில்லை. ஏன் அமெரிக்காவே இதை பயன்படுத்துவதில்லை. வாக்குப்பதிவு முடிந்தபின் குறைந்தது 40 நாட்களுக்கு வாக்கு இயந்திரங்கள் மையங்களில் பூட்டிக்கிடக்கும். இப்படியான நிலையில்தான் ஒரே நாடு ஒரே தேர்தல் எனக் கூறுகிறார்கள். நான் இங்கு பேசுவதை டெல்லியில் இருந்து உங்களால் ஒட்டுக் கேட்க முடியும் என்றால், வாக்குப் பதிவு இயந்திரத்தை ஹேக் செய்ய முடியாதா என்ன?. தேர்தல்களே நேர்மையான முறையில் நடக்கவில்லை என்றால் நேர்மையான ஆட்சி எங்கிருந்து நடைபெறும்?" என்று கேள்வி எழுப்பினார்.

# தமிழ்நாட்டில் பாஜக இரட்டை இலக்கத்தில் வெற்றி : பிரசாந்த் கிஷோர் கணிப்பு

புதுடெல்லி : பிப். 26-

தமிழ்நாட்டில் பாஜக கூட்டணி இரட்டை இலக்கங்களில் வெற்றி பெறும் என தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோர் கணித்துள்ளார்.



தேசிய அளவில் வட மாநிலங்களில் மிகவும் வலுவாக இருக்கும் பாஜக, தென் மாநிலங்களைப் பொறுத்தவரை பலவீனமாகவே உள்ளது. கர்நாடகாவில் மட்டும் வலுவாக உள்ளது என்றாலும் கேரளா, ஆந்திரா, தெலங்கானா மற்றும் தமிழ்நாட்டில் அக்கட்சி மிகவும் பலவீனமாக இருக்கிறது. அதனால் தென் மாநிலங்களில் வலுவான கூட்டணியை அமைக்க அக்கட்சி தீவிரமாக முயன்று வருகிறது.

தமிழகத்தை பொறுத்தவரை பாஜகவிடம் இருந்து அதிமுக விலகியுள்ள நிலையில் மீண்டும் அதிமுகவை கொண்டு வர பாஜக மேலிடம் பகிரத பிரயத்தனம் செய்து பார்த்தது. ஆனாலும் அதிமுக சம்மதிக்கவில்லை. தனது தலைமையில் தனியாக அணி அமைத்து போட்டியிட அதிமுக தயாராகி உள்ளது. அதிமுக மற்றும் பாஜக ஆகிய இரு கட்சிகளுமே பாமக, மற்றும் தேமுதிகவை தங்கள் கூட்டணிக்கு கொண்டுவரும் முனைப்பில் தீவிரமாக உள்ளன.

இந்த நிலையில் பாஜகவுடன் வாக்கு வங்கி உள்ள பெரிய கட்சிகள் எதுவும் இதுவரை தமிழ்நாட்டில் கூட்டணி சேரவில்லை. இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதி கட்சி உள்ளிட்ட சிறிய கட்சிகளும், ஓபிஎஸ் அணி மற்றும் அமமுக ஆகியவை மட்டுமே இதுவரை அந்த கூட்டணியில் இணைய சம்மதம் தெரிவித்துள்ளன. ஏற்கெனவே பாஜகவுக்கும் பெரிய வாக்கு வங்கி இல்லாத நிலையில் சிறிய கட்சிகளுடன் சேர்ந்து பாஜக தேர்தலை சந்திக்க உள்ளது.

ஏற்கனவே எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்புகளின் படி தமிழ்நாட்டில் 36 இடங்களுக்கும் மேல் திமுக கூட்டணி வெல்லும் என்று கூறப்பட்டுள்ள நிலையில் பிரபல தேர்தல் வியூக வகுப்பாளரான பிரசாந்த் கிஷோர் அதற்கு மாற்றாகக் கருத்து கூறியுள்ளார். தமிழ்நாட்டில் பாஜக கூட்டணி இரட்டை இலக்கங்களில் வெற்றி பெறும் என்று அவர் கூறியுள்ளார்.

இது குறித்து தனது கணிப்பை தெரிவித்துள்ள பிரசாந்த் கிஷோர் 'பிரதமர் மோடி உள்ளிட்ட பாஜகவினர் கூறுவது போல இந்தியாவில் 370 தொகுதிகளில் பாஜக வெற்றி பெறுவது கடினம்' என்றும், 'தமிழ்நாட்டில் இரட்டை இலக்கங்களில் பாஜக வெற்றி பெறும்' எனவும் அவர் கூறியுள்ளார். இது தமிழ்நாட்டு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பாஜகவுக்கு எதிராக ஊழல் குற்றசாட்டு : ராகுல், சித்தராமையா, டி.கே.சிவகுமார் ஆஜராக கோர்ட் நோட்டீஸ்

பெங்களூரு : பிப். 26-

கர்நாடக முன்னாள் முதல்வர் பசவராஜ் பொம்மை தலைமையிலான பாஜக அரசுக்கு எதிராக 40 சதவீத ஊழல் புகார் தெரிவித்து விளம்பரம் செய்த வழக்கில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே. சிவகுமாருக்கு பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.



கர்நாடகாவில் கடந்த 2022ம் ஆண்டு ஆட்சியில் இருந்த முதல்வர் பசவராஜ் தலைமையிலான பாஜக அரசுக்கு எதிராக ஒப்பந்ததாரர்கள் 40 சதவீத கமிஷன் புகார் தெரிவித்தனர். இதனை மையப்படுத்தி காங்கிரஸ் சார்பில் ''40 சதவீத கமிஷன் அரசு'' என பாஜகவுக்கு எதிராக பத்திரிகைகளிலும், சமூக வலைத்தளங்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது.

இதற்கு எதிராக கர்நாடக பாஜக செயலாளர் எஸ். சிவபிரசாத் பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதி ஜே.ப்ரீத் முன்னிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரரின் வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, கர்நாடக முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவகுமார் மீது இந்திய தண்டனை சட்டம் 499 மற்றும் 500 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்ய போலீஸாருக்கு உத்தரவிட்டார். இந்த வழக்கில் 3 பேரும் வருகிற மார்ச் 28ம் தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் எனவும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார். இதையடுத்து இவ்வழக்கு மார்ச் 28ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.



புதுச்சேரி அரசு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை சார்பில் புத்தக்குடியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கால்நடை மற்றும் கோழிகள் கண்காட்சியின் பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில் நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திர பிரியங்கா கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசினை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் கால்நடை துறையின் இணை இயக்குனர் டாக்டர், கோபிநாத் மற்றும் துறை அதிகாரிகள் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இந்த கண்காட்சியில் 192 மாடுகளும் 126 கோழிகளும் கலந்து கொண்டன. இதில் ஆரோக்கியமான மாடுகளுக்கும் கோழிகளுக்கும் அதன் உரிமையாளர்களிடம் பரிசுகள் வழங்கப்பட்டன.



காரைக்கால் மாவட்டம் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட புதுத்துறை பகுதியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக மாடுகள் மற்றும் கோழிகள் இடப்பெற்ற கண்காட்சி நடைபெற்றன. இன்நிகழ்ச்சியில் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் தலைமையேற்று கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் கால்நடை துறை இணை இயக்குநர் கோபிநாத், கால்நடை மருத்துவர் மருதாச்சலம், உதவியாளர் ரவி மற்றும் பொதுமக்களும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் 132 மாடுகளும் 86 கோழிகளும் கலந்து இடம்பெற்றன



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் பேரூர் கழக 5.வது வார்டு சார்பில் புரட்சித்தலைவி முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 76 வது பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளரும் சிதம்பரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான கே ஏ பாண்டியன் கலந்து கொண்டு ஐந்தாவது வார்டு பெண்களுக்கு இனிப்பு சேலை அன்னதானம் வழங்கினார் நிகழ்ச்சியில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் கே எஸ் கே பாலமுருகன் நகர செயலாளர் எம் ஜி ஆர் தாசன் கலந்து கொண்டார் நிகழ்ச்சி ஏற்பாடுகளை கழக ஐந்தாவது வார்டு உறுப்பினர் கோதை. எம் வசந்தகுமார் இதற்கான பணிகளை செய்திருந்தார் நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்



வேலூர் மாவட்டம், நாகநதி கிராமத்தில் நடைபெற்ற எருது விடும் விழாவில் உயிரிழந்த ராம்கி என்பவரின் குடும்பத்திற்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 3 லட்சம் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டார். இதை தொடர்ந்து, வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், ரூபாய் 3 லட்சத்திற்கான காசோலையினை உயிரிழந்தவரின் குடும்பத்தாரிடம் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் வே. இரா. சுப்புலெட்சுமி, உடனிருந்தார்.

# சென்னை ஆலந்தூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை தலைமை செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆய்வு

சென்னை : பிப். 26-

சென்னை ஆலந்தூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை தமிழ்நாடு தலைமை செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆய்வு செய்தார்.



நேற்று தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, ஆலந்தூர் மண்டலம், வார்டு-157க்குட்பட்ட ரிவர் வியூ காலனியில் நீர்வளத்துறை மூலம் ரூ.24.08 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலர் டாக்டர் சந்தீப் சக்சேனா, கூடுதல் தலைமைச் செயலர் ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், தெற்கு வட்டார துணை ஆணையர் எம். பி.அமித், நீர்வளத்துறை தலைமை பொறியாளர் அசோகன், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தேர்வுக்கு வராத மாணவர்களை பல கி.மீ நடந்து சென்று அழைத்து வந்த கூடலூர் பெண் காவலர்கள்

கூடலூர் : பிப். 26-

கூடலூரில் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு வீட்டில் இருந்தமாணவர்களைவீடு தேடிச் சென்று அழைத்து வந்து பள்ளியில் சேர்த்து விட்ட காவலர்களின் செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



நீலகிரி மாவட்டம், கூடலூர் பழங்குடி கிராமங்களில் பள்ளிக்குத் தொடர்ச்சியாக வராத மாணவர்கள் அதிக அளவில் இருக்கின்றனர். இதில் குறிப்பாக, புளியம்பாறை அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் அருகில் உள்ள காப்பிகாடு, கோழிக் கொல்லி போன்ற பழங்குடியின கிராமங்களில் உள்ளனர். பத்தாம் வகுப்பு செயல்முறை தேர்வு தொடங்கிய நிலையில், பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவர் மற்றும் பிற வகுப்புகளில் படிக்கும் 5 மாணவர்கள் பள்ளிக்கு வராமல் வீட்டிலேயே இருந்துள்ளார். இதையறிந்த பள்ளி ஆசிரியர்கள் பலமுறை நேரில் சென்று அழைத்த போதும், அவர்கள் பள்ளிக்கு வராமல் வீட்டிலேயே இருந்துள்ளனர்.

பின்னர் இச்சம்பவம் குறித்து, கூடலூர் மகளிர் காவல் நிலையத்துக்குப் பள்ளி ஆசிரியர்கள் தகவல் கொடுத்துள்ளனர். தகவலின் பேரில், கூடலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் உஷா தேவி மற்றும் காவலர் அழகு ஆகிய இருவரும், மாணவர்களின் வீடுகளுக்கு தேடி சென்று, அவர்களிடம் பேசி அவர்களை கையோடு பள்ளிக்கு அழைத்து வந்து, செயல் முறை தேர்வில் பங்கேற்க செய்தனர். காவலர்களின் இந்த செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# காட்டுமன்னார் கோவிலில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 76 பிறந்தநாள் விழா

கடலூர், பிப்,26

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவிலில் அதிமுக சார்பில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஜெயலலிதா திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து அன்னதானம் மற்றும் புடவை இனிப்பு பென்ற நலத் திட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்குகழக அமைப்பு செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமாகிய என்.முருகுமாறன் தலைமையேற்று அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.



இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் வாசு முருகையன், எம்.என் சிவக்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மாவட்ட கழக செயலாளர், சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ. பாண்டியன் கலந்து கொண்டு ஜெயலலிதாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, ஏழை, எளிய மக்களுக்கு புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செல்வி ராமஜெயம், மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் கானூர் பாலசுந்தரம், இதில் நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதி பாலச்சந்தர், அசோகன், விஸ்வலிங்கம், முன்னாள் மாவட்ட ஆவின் குழு தலைவர் செந்தில்குமார் ஏ.எஸ்.ஐ.கான்டிராக்டர் கிருபா, பொறியாளர் ஸ்ரீராம், பிரம்மதீஸ்வரன், நாகரத்தினம், குகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக பிரசித்தி பெற்ற ஸ்ரீ ஞான விநாயகர் ஆலயம், காளியம்மன் கோவிலில் நாடாளுமன்ற தேர்தலில் நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டி சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பெண்களுக்கு கோலப் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

# சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் அமைப்பின் மாசி மக தீர்த்தவாரி அன்னதானம் வழங்கப்பட்டது



புதுச்சேரி, பிப். 26–

புதுச்சேரியில் மாசி மக தீர்த்தவாரி திருவிழாவை முன்னிட்டு சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் மற்றும் புதுச்சேரி பத்திரிகையாளர்கள் சங்கம், அகில இந்திய சட்ட விழிப்புணர் இயக்கம் சார்பாக ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதில் மாசி மக தீர்த்தவாரி திருவிழா அன்னதான நிகழ்ச்சியை சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் அமைப்பின் சர்வதேச பொதுச் செயலாளர் டாக்டர் அ.சுரேஷ்குமார் துவக்கி வைத்தார்கள். சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் அமைப்பின் புதுச்சேரி மாநில தலைவர் சமூக சேவகர் ரவி ஜான் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்திருந்தார்.

மேலும் சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் அமைப்பின் பி.ஆர்.ஓ மற்றும் புதுச்சேரி பத்திரிகையாளர்கள் சங்க நிறுவன தலைவர் டாக்டர் மனோகர், புதுச்சேரி பத்திரிகையாளர் சங்க தலைவர் கலைச்சுடர் கா.பாரதி ,சமூக விழிப்புணர்வு இயக்கம் மாநிலத் தலைவர் டாக்டர். வி.ஆர்.ராஜ்குமார்,புதுச்சேரி பத்திரிகையாளர் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயபால்,மாநில துணைத்தலைவர் முருகவேல், துணைச் செயலாளர் தங்கப்பிரகாசம்,பி.ஆர் .ஒ. ஹரிதாஸ் , சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் அமைப்பின் புதுச்சேரி மாநில துணைத்தலைவர்கள் ஹரி கிருஷ்ணன் மற்றும் சிவா, சட்ட ஆலோசகர் நோட்டரி பப்ளிக் அட்வகேட் கோபி,மாநில ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன், மாநில இளைஞரணி தலைவர் ஹானஸ்ட் ராஜ்,மாநில துணைத்தலைவர் வினோத்,மாநில மாணவர் அணி தலைவர் கலைவாணன்,மாநில தொழிற்சங்க அணி தலைவர் பரமசிவம்,மாநில இளைஞரணி துணை செயலாளர் கோகுலகிருஷ்ணன் மற்றும் சுரேஷ், திலீபன், அபேல் என்ற வேளாங்கண்ணி, ரமேஷ்,சதீஷ்,அந்துவான், கோவிந்தசாலை முருகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள்.

மற்றும் புதுச்சேரி மாநில சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் அமைப்பின் மாநில நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் புதுச்சேரி பத்திரிகையாளர் சங்க நிர்வாகிகள் மற்றும் அகில இந்திய சட்ட விழிப்புணர்வு இயக்கம் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு அன்னதான நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.

# ஓய்வுபெற்ற காவல்துறை அமைச்சுப்பணியாளர் சங்கப் பொதுக்குழுக் கூட்டம்



புதுக்கோட்டை : பிப். 26–

புதுக்கோட்;டை மாவட்ட ஓய்வு பெற்ற காவல்துறை அமைச்சுப்பணியாளர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அறிவியல் இயக்கஅரங்கில்மாவட்டத் தலைவர் ச.சுதந்திரராஜன் தலைமையில் நடைப்பெற்றது. துணைத் தலைவர் க.அப்பாச்சாமி, செயலாளர் சத்தியராம் இராமுக்கண்ணு மற்றும் உறுப்பினர்கள் பேசினர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. ஓய்வுபெற்றவர்களில் 70வயது பூர்த்தி அடைந்தவர்களுக்கு 10 சதவீத ஓய்வு ஊதிய உயர்வை உடனடியாக தமிழ்நாடு அரசு வழங்கவேண்டும்.

2. ஓய்வு ஊதியர்களுக்கான மருத்துவ காப்பிட்டுத் திட்டத்திலுள்ள குறைகளைக் கலைந்து முழுமையான காசில்லா மருத்துவத்தை வழங்க வேண்டுமென்றும், அவசர காலத்தில் பட்டியல் இடப்படாத எந்த மருத்துவமணையில் சிகிச்சை பெற்றாலும் அந்த சிகிச்சைக்கும் இந்த சேவையை விரிவுபடுத்த வேண்டும்.

3. பழைய ஓய்வு ஊதிய திட்டத்தை தமிழ்நாடு அரசு உடன் அமுல் படுத்த வேண்டும்.

4.தமிழ்நாடுகாவல்துறை அமைச்சுப்பணியாளர் சங்கத்திற்கு சென்னை நகர பழைய காவல் ஆணையாளர் அலுவலக வளாகத்தில் கட்டிடம் வழங்கியுள்ள காவல்துறை இயக்குநருக்கும் மற்றும் சென்னை பெருநகர காவல் ஆனையாளருக்கும்இதற்கு முயற்சிஎடுத்துக்கொண்ட தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப் பணியாளர் சங்கத் தலைவர் மற்றும் நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவி;க்கின்றது.

5. புதுக்கோட்டை வட்டாச்சியர் பிரப்பித்துள்ள வாய்மொழி ஆணையை மறுபரிசீலனை செய்து ஓய்வுபெற்ற காவல்துறை சங்கத்திற்கு புதிதாகக் கட்டியுள்ள கட்டிடத்தில்சங்கக்கூட்டம் நடத்துவதற்கு அனுமதியளிக்குமாறு புதுக்கோட்டை வட்டாச்சியரை கேட்டுக்கொள்கிறது.

6. பணியில் இருக்கும் போதே மரணமடையும் காவல்துறை அமைச்சுப் பணியாளர்களுக்கு அவர்களதுகுடும்பநலத்தை பேணி காக்கும் வகையில் அவர்களது குடும்பத்திற்கு உடனடியாக ரூபாய் ஐந்து லட்சம் வழங்கிவரும் தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப்பணியாளர் சங்கத்தைஇப்பொதுக்குழு பாராட்டுகிறது. பொருளாளர் வீர. ராஜமாணிக்கம் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

# திருக்கண்டலம் அருள்மிகு ஆனந்தவல்லி அம்பிகை சமேத திருக்கள்ளீஸ்வரர் திருக்கோவிலில் 18–ம் ஆண்டு மாசிதெப்ப திருவிழா நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, பிப்26–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், திருக்கண்டலம் ஊராட்சியில் புகழ்பெற்ற அருள்மிகு ஆனந்தவல்லி அம்பிகை சமேத திருக்கள்ளீஸ்வரர் திருக்கோவில் ஒன்று உள்ளது.ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவில் திருஞானசம்பந்தர் பாடற் பெற்ற திருத்தலம் ஆகும். இத்திருகோவிலில் நேற்று முன்தினம் இரவு 18-ம் ஆண்டு மாசிதெப்ப திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

இதை முன்னிட்டு வியாழக்கிழமை மாலை சுந்தர விநாயகர், முருகன்,வள்ளிதெய்வானை புறப்பாடு நடைபெற்றது. வெள்ளிக்கிழமை மாலை சுக்கிரவல்லி அம்பாள் புறப்பாடு நடைபெற்றது. நேற்று முன்தினம் மாலை அருள்மிகு ஆனந்தவல்லி அம்பிகை சமேத திருக்களீஸ்வரருக்கு திருக்கல்யாணம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

எனவே,கிராம மக்கள் மடவிளாகம் கிராமத்தில் இருந்து தாய் வீட்டு சீதனமாக மஞ்சள்,குங்குமம், வளையல்,பூ,பழம்,புடவை உள்ளிட்ட சீர்வரிசை பொருட்கள் மேள-தாளம் முழங்க கோவிலுக்கு கொண்டு வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் பின்னர்,கைலாச வாத்தியம்,மங்கள வாத்தியம் முழங்க,கண்ணை கவரும் வானவேடிக்கையுடன் சுவாமிக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது.

பின்னர், அருள்மிகு சோமஸ்கந்தர் அம்பாள் கோவிலில் பிரகார புறப்பாடு நடைபெற்றது. இதைத் தொடர்ந்து கோவிலின் எதிரே உள்ள திருக்குளத்தில் சுவாமி உலாவரும் நிகழ்ச்சியான தெப்பத் திருவிழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.இதை முன்னிட்டு ஊராட்சி மன்ற தலைவர் மதன் சத்யராஜ் ஏற்பாட்டில் 9-ம் ஆண்டாக 3,000 பேருக்கு கோவில் வளாகத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன், எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆ.சத்தியவேலு ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில்,ஒன்றிய பொருளாளர் கே.எஸ். எம்.குப்பன்,ஒன்றிய குழு உறுப்பினர் ரவி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டி.கே.ராமச்சந்திரன், துணைத் தலைவர் கே.எஸ் லிங்கதுரை, தர்மகத்தா குமார், மாவட்ட பிரதிநிதி கே.வி. வெங்கடாசலம்,மோகன், சோழவரம் ஒன்றிய செயலாளர் செல்வசேகரன், தியாகராஜன்,ராஜேந்திரன் ஜெய்சங்கர்,சம்பத் முதலியார், பெய்லி,வார்டு உறுப்பினர்கள் எம்.கே.ஆனந்தன்,துர்கா விஜயகுமார், ராஜேந்திரன், இளையரசு, குடியரசு,சுமதிசேகர்,ஆர். வினோத், துர்கா ராஜேந்திரன், ஊராட்சி செயலர் உமாநாத் உள்ளிட்ட உள்ளாட்சிஅமைப்பு பிரதிநிதிகள்,பல்வேறு கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள்,மகளிர் சுய உதவி குழு பெண்கள், பொதுமக்கள்,பக்தர்கள் என சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மடவிளாகம்,திருக்கண்டலம் கிராம பொதுமக்கள்,பக்தர்கள், விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.





சென்னை பெரம்பூர் தொகுதிக்கு உட்பட்ட எம்.கே.பி. நகர் பகுதியில் பொதுக்கூட்டம் அம்மா பேரவை மாவட்ட செயலாளர் டி.சரவணன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக மறைந்த முன்னாள் முதலமைச்சர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்தனர். கூட்டத்தில் வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ்,செய்தி தொடர்பாளர் பேராசிரியர் ச.கல்யாணசுந்தரம், அமைப்பு செயலாளர் ராயபுரம் மனோ ஆகியோர் சிறப்புரையாற்றி கூட்ட இறுதியில் 76 கிலோ எடையுள்ள கேக் வெட்டி இனிப்புகளை வழங்கி 1000 பேருக்கு அரிசி, பருப்பு, சர்க்கரை, முந்திரி, திராட்சை உள்ளிட்ட மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு நலத்திட்ட உதவிகளாக வழங்கப்பட்டது. இதில் மதுரைவீரன், பிராங்கிளின், ஆர். கே நகர் மாவட்ட மகளிர் அணி செயலாளர் நாகரத்தினம், மற்றும் பெரம்பூர் - ஆர்.கே.நகரை சேர்ந்த வட்ட செயலாளர்கள், மாவட்ட பிற அணி நிர்வாகிகள், மகளிர் அணியினர், உள்ளிட்ட 1000 க்கும் மேற்பட்டோர் இருந்தனர்.



வேலூர் மாவட்டம் தேன்பள்ளி கிராமத்தில் அமமுக சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கியும் இனிப்புகள் வழங்கியும் பட்டாசுகள் வெடித்தும் தேன் பள்ளி கிராம அ.ம.மு.க-வினர் ஜெயலலிதா பிறந்தநாளை கொண்டாடினார்கள். இதில் வேலூர் மாநகர் மாவட்ட செயலாளர் ராஜா தலைமையில் சோளிங்கர் மேற்கு ஒன்றிய செயலாளர் .பாபு ஏற்பாட்டில்,அம்மா பேரவை மாவட்ட செயலாளர் சதிஷ்குமார் முன்னிலையில், மாவட்ட துணை செயலாளர் மஞ்சு, தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் எம்.பி. ஏழுமலை,டெல் ஜெயவேலு,ஒன்றிய துணை செயலாளர் சத்தியராஜ்,இளைஞர் அணி மாவட்ட துனை தலைவர் வெங்கடேசன்,வெங்கடேசன், வேல்முருகன், மாவட்ட எம்.ஜி.ஆர்.மன்ற பொருளாளர் சசிகுமார்,பிரின்ஸ், ரமேஷ், மாவட்ட மாற்றுத் திறனாளி அணி செயலாளர் சாமுவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர்கள் .

# புளியங்குடியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 76 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



தென்காசி,பிப்.26–

தென்காசி மாவட்டம்-புளியங்குடியில்முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி உத்தரவின் பேரில் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் திருவுருவச் சிலை அருகே அலங்கரித்து வைக்கப்பட்ட தமிழக முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவின் 76- வது பிறந்தநாள் விழா நிகழ்ச்சியில் முன்னாள் நகரச் செயலாளர் சங்கர பாண்டியன் தலைமையில், மாவட்ட இணைச் செயலாளர் சண்முகப்பிரியா முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மண்டலப் பொருளாளர் ஆத்மநாதன், மண்டலப் பிரிவு பாலசுப்ரமணியம், எம்ஜிஆர் மன்ற செயலாளர் சாகுல் ஹமீது, முன்னாள் பொருளாளர் மாரியப்பன், நகர இளைஞரணி செயலாளர் கிருஷ்ணசாமி என்ற கோபி, நகரத் துணைச் செயலாளர் கதிரவன், மாநில பேச்சாளர் கோவைபுகாரி,முன்னாள் நகரச் செயலாளர் பன்னீர்செல்வம், முன்னாள் அம்மா பேரவை செயலாளர் கணேசன், கணேஷ் குமார், சௌகத் அலி பாலசுப்பிரமணியன், கடுவா முகமது உசேன், விஜய், சபரிநாதன், கண்ணன், திருமலை குமார், சரவணகுமார், நாகராஜன் மற்றும் அதிமுக நிர்வாகிகள், சார்பு பணி நிர்வாகிகள், ஏராளமானோர் கலந்து கொண்டுபுரட்சித்தலைவி அம்மாவின் புகழை போற்றும்படி கோஷமிட்டு பொதுமக்களுக்குஇனிப்பு வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்.

# ஆலங்குடியில் போக்ஸோ வழக்கில் இளைஞர் கைது

ஆலங்குடி,பிப்.26–


ஆலங்குடியில் பிளஸ் 2 பயிலும் மாணவியை கடத்திச்சென்றுதிருமணம் செய்த இளைஞரை போக்ஸோ சட்டத்தின் கீழ் போலீஸார் கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி கலிபுல்லாநகர் பகுதியைச் சேர்ந்த பிளஸ் 2 பயின்று வந்த 17 வயது மாணவி பிப்.15-ஆம் தேதி வீட்டில் இருந்து வெளியே சென்றவர் வீடுதிரும்பவில்லை. இதுகுறித்து, மாணவியின் பெற்றோர் ஆலங்குடி காவல் நிலைத்தில் புகார் அளித்தனர்.

இதுகுறித்து போலீஸார்மேற்கொண்ட விசாரணையில் திருமயம் அருகேயுள்ள ராங்கியம் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் மகன் பிரவீன்(21) மாணவியை கடத்திச்சென்று திருமணம் செய்தது தெரியவந்தது.தொடர்ந்து, பிரவீனை போக்ஸோ சட்டத்தின் கீழ் போலீஸார் கைதுசெய்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

# ராள்ளபாடியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆண்டு விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது







ஊத்துக்கோட்டை, பிப்26–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், குமரப்பேட்டை ஊராட்சியில் ராள்ளபாடி காலனியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி உள்ளது.இப்பள்ளியின் ஆண்டு விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெ.ஷகிலா தலைமை தாங்கினார்.தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பின் மாவட்ட செயலாளர் ராஜாஜி,வட்டார தலைவர் செல்வம், பொருளாளர் ஆனந்தன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் எ.சுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு விருந்தினர்களாக எல்லாபுரம் வட்டார கல்வி அலுவலர்கள் சாதுசுந்தர்சிங்,கல்பனா, ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன்,மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சித்ராமுனுசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கு இடையே விளையாட்டுப் போட்டி,பேச்சு போட்டி, கட்டுரை போட்டி,ஒவியப்போட்டி, ஒப்புவித்தல்போட்டி உள்ளிட்ட பல்வேறு வகையான போட்டிகள்,வரவேற்பு நடனம், தேசபக்தியை வலியுறுத்தும் நாடகங்கள்,ஆன்மீகத்தை போற்றும் வகையில் பக்தி நடனங்கள் உள்ளிட்டவை நடைபெற்றது.பின்னர், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசு பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், ஊர் முக்கிய பிரமுகர்கள், பெரியோர்கள், இளைஞர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்டோர் சிறப்பாக செய்திருந்தனர். முடிவில், உதவி ஆசிரியர் டி.தனலட்சுமி நன்றி கூறினார்.

# காவிரி கடைமடை கதவனை நீர்த்தேக்கத்தில் இறங்கிய கூலி தொழிலாளி மின்சாரம் பாய்ந்து உயிரிழப்பு



பூம்புகார், பிப். 26–

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, மேலையூரில் காவிரி ஆற்றின் கடைசி கதவணை அமைந்துள்ளது. காவிரி கடைமடை நீரொழிங்கி என்றழைக்கப்படும் இக்கதவனையில் இருந்து சீர்காழி, பூம்புகார் சுற்றுவட்டார பகுதிகளுக்கு பாசன தண்ணீர் பிரித்து வழங்கப்படுகிறது. இந்நிலையில் கதவணையின் மேல் பகுதியில் சென்ற உயர் மின்னழுத்து மின்கம்பி அருந்து தண்ணீரில் விழுந்து உள்ளது. இதனால் அங்கு தேங்கி இருந்த தண்ணீர் முழுவதும் உயர் அழுத்த மின்சாரம் பாய்ந்துள்ளது.

இதனை அறியாமல் குரங்கு புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த கூலி தொழிலாளி சிவமூர்த்தி (42) என்பவர் தண்ணீரில் இறங்கியுள்ளார். இதில் மின்சாரம் பாய்ந்து சிவமூர்த்தி கதவணை உள்ளேயே உயிரிழந்தார். அவ்வழியே சென்றவர்கள் விபத்து குறித்து மின்வாரியம் மற்றும் பூம்புகார் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த போலிசார் சிவமூர்த்தி உடலை மீட்டு உடற்கூறாய்வுக்காக சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததுடன் விபத்து குறித்து வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். மேலும் தண்ணீரில் மின்சாரம் பாய்ந்ததால் அதிலிருந்த மீன்கள், தவளை,பாம்பு என அனைத்தும் இறந்து மிதந்துள்ளது.

# சங்கரன்கோவில் ஆரம்பப் பள்ளியில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கல்



சங்கரன்கோவில். பிப்.26–

இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் ஆரம்பப்பள்ளியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் வக்கீல் சண்முகையா தலைமை வகித்தார், கோயில் துணை ஆணையர் கோமதி முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடந்த பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப்போட்டி, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார்.

இதில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலா சங்கர பாண்டியன், நகரச் செயலாளர் பிரகாஷ், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் வெள்ளைச்சாமி, முப்பிடாதி, முத்துலட்சுமி , ஒன்றியச் செயலாளர் கே.வி. பெரியதுரை, மாணவரணி வீரா, வீரமணி, சீனி , ஜெயக்குமார் செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்,விழாஏற்பாடுகளை பள்ளி தலைமையாசிரியை சுப்புலெட்சுமி ஆசிரியர்கள் சதீஸ் குமார், அருண் பிரகாஷ்,,கிருஷ்ணவேணி சுப்புலெட்சுமி, சுப்புஜோதி ஆகியோர் செய்திருந்தனர்.

# அரியலூரில் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 76 வது பிறந்தநாள் விழா – தாமரை ராஜேந்திரன் பங்கேற்பு





அரியலூர்,பிப்.26–

அரியலூரில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 76 வது பிறந்தநாள் விழாவில் அதிமுக மாவட்ட செயலாளர் தாமரை ராஜேந்திரன் பங்கேற்றார்.

முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 76 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள ஜெயலலிதா உருவ சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அதிமுக மாவட்ட செயலாளரும் முன்னாள் அரசு தலைமை கொறடாவுமான தாமரை எஸ் ராஜேந்திரன், அரியலூர் நகரின் பல்வேறு வார்டுகளிலும், கட்சி நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜெயலலிதா பிறந்தநாள் விழாக்களில் பங்கேற்று, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் அதிமுக அரியலூர் நகரச் செயலாளர் ஏ பி செந்தில், மாவட்ட பொருளாளர் அன்பழகன், ஓ பி சங்கர், அரியலூர் ஒன்றிய செயலாளர் பொய்யூர் பாலசுப்ரமணியன், தாமரைக்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் பிரேம்குமார், வக்கீல்கள் வெங்கடாஜலபதி, ராமகோவிந்தராஜன், சண்முகம், கொளஞ்சியப்பன், எஸ் வி சாந்தி, நகர நிர்வாகிகள் மனிதன் செல்வகுமார், ஓ பி மோகன், ஜபருல்லா, ஏ எஸ் ஆர் இளங்கோவன், அம்பேத்கர், எஸ். கே. கார்த்திக், திருமூர்த்தி, ஐடி விங் வசந்தகுமார் மேலத்தெரு கருப்பையா, ஒன்றிய கவுன்சிலர் கடுகூர் முருகேசன் உள்பட, ஏராளமானோர் பங்கேற்றனர்.

இதேபோல் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஜெயங்கொண்டம், செந்துறை, ஆண்டிமடம், திருமானூர், தா பழுர், மற்றும் அரியலூர் ஒன்றிய பகுதிகளில், ஜெயலலிதாவின் 76 வது பிறந்தநாள் விழா, ஆங்காங்கு உள்ள அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களால், கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

# குஜராத்தின் ஓகா மற்றும் பெய்ட் துவாரகா தீவை இணைக்கும் 'சுதர்ஷன் சேது' பாலத்தை திறந்து வைத்தார் பிரதமர் மோடி

காந்திநகர் : பிப். 26-

பிரதமர் நரேந்திர மோடி குஜராத்தின் ஓகா மற்றும் பெய்ட் துவாரகா தீவை இணைக்கும் 'சுதர்ஷன் சேது' பாலத்தை நேற்று திறந்துவைத்தார்.



ரூ.979 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இந்தப் பாலமானது துவாரகாதீஷ் கோயிலுக்கு வருகை தரும் மக்கள் மற்றும் யாத்ரீகர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. 2.32 கி.மீ நீளமுள்ள இப்பாலம் நாட்டின் மிக நீளமான கேபிள்-தாங்கு பாலமாக அமைந்துள்ளது. 'சிக்னேச்சர் பாலம்' என்றும் இது அழைக்கப்படுகிறது.

இந்த நான்கு வழிச்சாலை பாலம் 27.20 மீட்டர் அகலமும், பாலத்தின் இரண்டு பக்கமும் 2.50 மீட்டர் அகல நடைபாதையும் கொண்டுள்ளது. இந்த நடைபாதையில் பகவத் கீதையின் வசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் இருபுறமும் கிருஷ்ணரின் உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாலத்தை திறந்து வைத்தது குறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் தள பக்கத்தில், "நிலங்களையும் மக்களையும் இணைக்கும் பாலமான சுதர்சன் சேதுவை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இப்பாலம் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான நமது அர்ப்பணிப்பின் சான்றாகத் துடிப்புடன் நிற்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மோடி "சுதர்சன் பாலத்தை நான் கட்ட வேண்டும் என்பதை பகவான் கிருஷ்ணர் முடிவு செய்தார். அவரால் இது சாத்தியமானது. குஜராத்தின் முதல்-மந்திரியாக இருந்தபோது, நான் சுதர்சன் சேது திட்டத்தை மத்திய காங்கிரஸ் அரசிடம் முன்வைத்தேன். ஆனால் அவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை. துவாரகாவிற்கு நான் ஒரு மயில் தோகையை எடுத்துச் சென்று சமர்ப்பித்தேன். என் கனவு நனவாகியதால், என் இதயம் உணர்ச்சிகளால் நிரம்பி வழிகிறது என்றார்.

இந்த பாலத்துக்கு மோடி 2017 அக்டோபர் மாதம் அடிக்கல் நாட்டினார். இது பழைய மற்றும் புதிய துவாரகாவை இணைக்கும் என்று அவர் கூறி இருந்தார். இந்த பாலத்தை நேற்று அவர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். அதைத் தொடர்ந்து பிரதமர் மோடி துவாரகாவில் ரூ.4,150 கோடிக்கு அதிகமான பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

ராஜ்கோட், பதிண்டா, ரேபரேலி, கல்யாணி மற்றும் மங்களகிரி ஆகிய இடங்களில் எய்ம்ஸ் மருத்துவமனைகளை நாட்டுக்கு அர்ப்பணித்தார். ராஜ்கோட்டில் உள்ள ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் ரூ.48,100 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டினார்.



▶ நேற்று சென்னை முத்தமிழ்ப்பேரவை அரங்கில் மதுரை மாவட்டத்தின் 2022 ஆண்டிற்கான தமிழ்ச்செம்மல் விருதை கவிஞர் இரா.இரவிக்கு, தமிழ்வளர்ச்சித்துறை மற்றும் செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் சாமிநாதன் வழங்கினார், உடன் இயக்குனர் ஔவை,அருள், சந்தோசம் ஆகியோர் உள்ளனர்.



▶ திருநெல்வேலியில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரம் பிள்ளையை அவதூறாக பேசிய திமுக நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வை கண்டித்து திருநெல்வேலி டவுன் வாகையடி முனையில் தமிழ்நாடு சைவ வேளாளர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற சைவ வேளாளர் சங்க மாநிலத்தலைவர்பண்ணை சொக்கலிங்கம்பிள்ளை, நெல்லை மாவட்டத் தலைவர் ஜெகதீசபிள்ளை மாவட்டச் செயலாளர் மாரியப்பபிள்ளை, இளைஞர் அணிச் செயலாளர் பந்தல் .ராஜாபிள்ளை மாநிலச் செயலாளர் வழக்கறிஞர் கனகசபாபதிபிள்ளை, திருநெல்வேலி மாவட்ட இளைஞர் அணி மாவட்டச் செயலாளர்பணகுடி மு.சங்கர் ஆகியோருக்கு இந்துமுன்னணி மாநிலச் செயலாளர் வழக்கறிஞர் குற்றாலநாதன் சால்வை அணிவித்து போராட்டத்திற்கு இந்துமுன்னணி சார்பில் ஆதரவு தெரிவித்தார்,சைவவேளாளர் சங்க மாநிலத் தலைவர் பன்னை சொக்கலிங்கம் இந்துமுன்னணி மாநிலச் செயலாளர் கா.குற்றாலநாதனுக்கு மாலை அணிவித்து வரவேற்றார் சைவவேளாளர் சங்கங்களை சார்ந்த 500க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# விளவங்கோடு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் விஜயதாரணி பாஜகவில் சேர்ந்தது வருத்தம்தான் – கார்த்தி சிதம்பரம் எம்.பி

அறந்தாங்கி,பிப்.26-

கட்சியில் மீண்டும் வாய்ப்பு கிடைத்தால் சிவகங்கை தொகுதியில் போட்டியிடுவேன் சிவகங்கைபாராளுமன்ற உறுப்பினர் கார்த்திக்சிதம்பரம் அறந்தாங்கியில் பேட்டி



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகேசிலட்டூரில் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் திருச்சி புதுக்கோட்டை மதுரை திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 13 காளைகள் மற்றும் 117மாடுபிடி வீரர்களும் கலந்து கொண்டனர், போட்டியில் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்திக் சிதம்பரம் கலந்து கொண்டு வெற்றிபெற்ற காளை மற்றும் காளையர்களுக்கு பரிசு வழங்கினார்.

பின்னர் தொடர்ந்து செய்தியாளிடம் கார்த்திக் சிதம்பரம் எம்.பி.

சட்டமன்ற உறுப்பினர் விஜயதாரணி காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி பாஜகவில் சேர்ந்தது ரொம்ப வருத்தம் அளிக்கிறது, சிவகங்கை தொகுதியில் எல்லாருக்கும் தெரியும் நான் வெளிப்படையாக சென்று தொகுதி மக்களை சந்தித்து வருகிறேன்

கார்த்தி சிதம்பரம் எம்.பி.யை கண்டா வர சொல்லுங்க! கையோட கூட்டி வாருங்க!! என்று சிவகங்கை தொகுதியில் பல்வேறு பகுதிகளில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பில் ஒட்டப்பட்ட சுவரொட்டி அது குசும்பிற்காக சிலர் நோட்டிஸ் ஒட்டி உள்ளார்கள் அந்த அமைப்பு இந்த பகுதியில் இருக்கிறதா என்று கூட தெரியவில்லை என்று கூறினார்.

# ஆலங்குடி அருகே மாங்கோட்டை வடமாடு ஜல்லிக்கட்டு போட்டி

ஆலங்குடி,பிப்.26-

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மாங்கோட்டையில் கிராம பொதுமக்கள் மற்றும் இளைஞர்களால் ஐந்தாம் ஆண்டு வடமாடு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது, இந்த போட்டியில் புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 13 காளைகள் கலந்து கொண்டன, ஒவ்வொரு காளையை அடக்க 9 வீரர்களைக் கொண்ட குழு அனுமதிக்கப்பட்டது.



கந்தர்வக்கோட்டை கால்ஸ் மேற்பார்வையாளர் ஸ்ரீதர், கறம்பக்குடி வட்டாட்சியர் ஜகுபர் வீரர்களுக்கு உறுதிமொழி ஏற்று வைத்து வடமாடு ஜல்லிக்கட்டு போட்டியை தொடங்கி வைத்தனர், போட்டியில் வெற்றி பெற்ற காளைகளுக்கும் காளைகளை அடக்கிய வீரர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன, காளைகள் முட்டியதில் வீரர்கள் 11பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களுக்கு முகாமில் சிகிச்சை அளிக்கப்பட்டது, பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆலங்குடி காவல்துறை துணை கண்காணிப்பாளர் பவுல்ராஜ் மற்றும் காவல் துறையினர் செய்திருந்தனர், வடமாடு ஜல்லிக்கட்டு போட்டியை திரளான பார்வையாளர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

# விஜயதரணியின் ராஜினாமா கடிதம் ஏற்பு : சபாநாயகர் அப்பாவு அறிவிப்பு

திருநெல்வேலி : பிப். 26-

காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த விஜயதரணியின் ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவும், விளவங்கோடு சட்டமன்ற தொகுதி காலியாக இருப்பது குறித்து முறைப்படி அறிவிக்கப்படும் என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார்.



நெல்லையில் சபாநாயகர் அப்பாவு நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் செல்வப்பெருந்தகை, அரசியலமைப்புச் சட்டத்தின்படி, காங்கிரஸ் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விஜயதரணி பாஜகவில் சேர்ந்துவிட்டார். எனவே, அவரை உடனடியாக பதவிநீக்கம் செய்யக்கோரி சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் முதன்மைச் செயலருக்கும் அனுப்பி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, சட்டமன்ற உறுப்பினர் விஜயதரணியும், தனது பதவி விலகல் கடிதத்தினை தன்னுடைய கைப்பட எழுதி, இணைய வழியில் என்னுடைய கவனத்துக்கும் சட்டப்பேரவையின் முதன்மைச் செயலரின் கவனத்துக்கும் அனுப்பினார். இந்த இரண்டு கடிதங்கள் குறித்த விவரங்களை முதன்மைச் செயலர் என்னுடைய கவனத்துக்கு அனுப்பிவைத்தார். அதை நான் பரிசீலனை செய்து பார்த்ததில், விஜயதரணி, முறைப்படி தன்னுடைய கைப்பட பதவி விலகல் கடிதம் கொடுத்திருப்பதைத் தெரிந்துகொண்டேன்.

மீண்டும், விஜயதரணி நேற்று காலை என்னை தொலைபேசியில் அழைத்து அந்த கடிதத்தை நான்தான் எனது கைப்பட எழுதி அனுப்பியிருக்கிறேன். நான் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்துவிட்டேன். எனவே, காங்கிரஸ் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நான் விலகுவதாக என்னிடம் தெரிவித்தார். நான் அவரிடம் சட்டப்படி ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்தேன். கடிதங்களை ஆய்வு செய்து பார்த்ததில், முறையாக விஜயதரணி பதவி விலகல் கடிதம் கொடுத்துள்ளார். எனவே, அவரது பதவி விலகலை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதுதொடர்பான ஆவணங்கள் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி காலியாக இருப்பது குறித்து முறைப்படி அறிவிக்கப்படும்" என்று அவர் கூறினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் சிறப்பு மருத்துவ முகாம்கள் : அமைச்சர் பார்வையிட்டார்



பெரம்பூர் : பிப். 26-

தமிழக முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை பாரிமுனை சாலை விநாயகர் கோயில் தெரு பகுதியில், "மக்கள் முதல்வரின் மனிதநேய திருநாள்" என்ற பெயரில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக மருத்துவ அணி சார்பில், துறைமுக கிழக்கு பகுதி 56வது வட்டத்தில் மருத்துவ பரிசோதனை முகாம் நேற்று காலை நடைபெற்றது. வட்ட செயலாளர் பரத்குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த முகாமில், அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மருத்துவர் அணி செயலாளர் எழிலன் எம்எல்ஏ ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மருத்துவ முகாமை துவக்கிவைத்தனர்.

எழும்பூர் வடக்கு பகுதி 77வது வட்டத்துக்கு உட்பட்ட புளியந்தோப்பு குடியிருப்பு பகுதியில் வட்டசெயலாளர் தயாளன் ஏற்பாட்டில், மருத்துவ முகாம் நடைபெற்றது. 71 வது வட்டத்தில் வட்ட செயலாளர் ருத்ரமூர்த்தி ஏற்பாட்டில் ஜமாலியா ஹைதர் கார்டன் மெட்ரிகுலேஷன் பள்ளியில் மருத்துவ முகாம் நடைபெற்றது. கொளத்தூர் ஜவகர் நகர் 70 அடி சாலையில் தனியார் திருமண மண்டபத்தில் வட்ட செயலாளர் பி.டி.சி. ரவி ஏற்பாட்டில் மருத்துவ முகாம் நடைபெற்றது. அயனாவரம் என்எம்கே. தெருவில் உள்ள தனியார்திருமண மண்டபத்திலும் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இந்த அனைத்து மருத்துவ முகாம்களிலும் அமைச்சர் சேகர்பாபு கலந்துகொண்டு நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார். அத்துடன் பொதுமக்களிடம் கலந்துரையாடினார். நிகழ்ச்சியில் கலாநிதி வீராசாமி எம்பி, எம்எல்ஏக்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் நிலைக்குழு தலைவர் சாந்தகுமாரி, திருவிக நகர் மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் சந்துரு, பகுதி செயலாளர்கள் ஐசிஎப் முரளி, நாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அறந்தாங்கி அருகே சிலட்டூரில் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது

அறந்தாங்கி,பிப்.26-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே சிலட்டூரில் பொங்கல் விழாவை முன்னிட்டு வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது.



இந்த போட்டியில் திருச்சி புதுக்கோட்டை மதுரை திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 13 காளைகள் 117 மாடுபிடி வீரர்களும் கலந்து கொண்டனர். ஒரு காளைக்கு 9 பேர் வீதம் களத்தில் இறக்கப்பட்டனர், களத்தில் காளைகளை மல்லுக்கட்டிய மாடு பிடிவீரர்கள் சில காளைகளை அடக்கினார்கள், சில காளைகள் மாடுபிடி வீரர்களுக்கு போக்கு காட்டி மாடுபிடி வீரர்களை களத்தில் திக்கு முக்காட வைத்தது.

போட்டியை காண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த ஏராளமான பொதுமக்கள் போட்டியை கண்டு களித்தனர்.

ஒவ்வொரு காளைகளுக்கும் 25 நிமிடம் ஒதுக்கப்பட்டது, 25 நிமிடங்களுக்குள் பிடிபடாத காளைகள் வெற்றி பெற்றதாகவும் 25 நிமிடங்களுக்குள் காளைகளை அடக்கிய வீரர்கள் வெற்றி பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது, வெற்றி பெற்ற காளைகளுக்கும் மாடுபிடி வீரர்களுக்கும் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்திசிதம்பரம் சார்பில் பரிசு தொகை மற்றும், பரிசு பொருட்கள் பரிசுகளாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அறந்தாங்கி

காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையில் அகிலேஷ் யாதவ் பங்கேற்பு

லக்னோ : பிப். 26-

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி மேற்கொண்டுள்ள இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையில் உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வரும் சமாஜ்வாதி கட்சித் தலைவருமான அகிலேஷ் யாதவ் கலந்து கொண்டார்.



முன்னதாக, தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டால் மட்டுமே ராகுலின் யாத்திரையில் பங்கேற்பேன் என்று சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் அறிவித்திருந்தார். அண்மையில் காங்கிரஸ் - சமாஜ்வாதி தொகுதிப் பங்கீடு எட்டப்பட்ட நிலையில் நேற்று ஆக்ராவில் நடந்த யாத்திரையில் அகிலேஷ் பங்கேற்றார்.

அந்த யாத்திரையில் உரையாற்றிய அகிலேஷ் யாதவ், "வரும் நாட்களில் நம் முன் இருக்கப்போகும் மிகப்பெரிய சவால் ஜனநாயகத்தையும், அரசியல் சாசனத்தையும் பாதுகாப்பதே ஆகும். அம்பேத்கரின் கனவை நினைவாக்க நாம் இதனைச் செய்ய வேண்டும். பாஜகவை ஒழிப்போம். தேசத்தைப் பாதுகாப்போம்" என்றார்.

# ரூ.10–க்கு 3 இட்லி, ஏழைகளுக்கு உதவும் 'மோடி இட்லி' உணவகம் – சென்னையில் பாஜகவினர் அசத்தல்

சென்னை : பிப். 26-

சென்னை கே.கே. நகர் (மேற்கு) முனுசாமி சாலையில் 'மோடி இட்லி' உணவகத்தை தென் சென்னை மாவட்ட பாஜக பொருளாளர் கே.பி. நாகராஜன் ஒத்துழைப்புடன், மண்டலத் தலைவர் ஜி.கோபிநாதன் நடத்தி வருகிறார்.




இங்கு ரூ.10-க்கு 3 இட்லியும், ஐந்து ரூபாய்க்கு ஒரு வடையும் விற்பனை செய்யப்படுகிறது. காலையில் வேலைக்கு செல்வோர், தொழிலாளிகள், சாலையோரம் வசிப்பவர்கள் 'மோடி இட்லி' உணவகத்தில் சாப்பிட்டுச் செல்கின்றனர். வாரத்தில், சனி, ஞாயிறு தவிர்த்து 5 நாட்கள் செயல்படும் இந்த உணவகம் மூலம், 10-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்பையும் பாஜகவினர் வழங்கி வருகிறார்கள். காலை 6 மணி முதல் 9 மணி வரை மட்டுமே இங்கு இட்லி விற்பனை செய்யப்படுகிறது.

இது தொடர்பாக 'மோடி இட்லி' உணவகத்தை நடத்தி வரும் தென் சென்னை மாவட்ட பாஜக மண்டலத் தலைவர் ஜி.கோபி நாதன் கூறியதாவது: கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 'மோடி இட்லி' உணவகத்தைத் தொடங்கினோம். ஒரு நாளைக்கு பார்சல் உள்பட 80 பேர் சாப்பிடும் அளவுக்கு தயாரிக்கிறோம். சுமார் 280 இட்லி வரை விற்பனை செய்யப்படுகிறது. இதில் லாபம் எல்லாம் கிடையாது. மன நிறைவு மட்டும் தான். ஆரம்பத்தில் இங்கு யாரும் சாப்பிட வர மாட்டார்கள். நிறைய நாட்கள் இட்லி வீணாகி இருக்கிறது. பிறகு ஒவ்வொரு தவறையும் சரி செய்யத் தொடங்கினோம். இப்போது, இட்லி மளமளவென விற்பனையாகி விடுகிறது. விரைவில், விருகம்பாக்கம் சட்டப் பேரவைத் தொகுதியில் 10-க்கும் மேற்பட்ட இடங்களில் 'மோடி இட்லி' உணவகத்தை தொடங்க திட்டமிட்டிருக்கிறோம் என்று கூறினார்.

தென் சென்னை மாவட்ட பாஜக பொருளாளர் கே.பி. நாகராஜன் கூறும் போது, அம்மா உணவகம் சரிவர இயங்காததுதான் 'மோடி இட்லி' தொடங்க எங்களுக்கு அடித்தளமாக அமைந்தது. எங்களது நண்பர்கள், கட்சிக்காரர்கள், தன்னார்வலர்கள் உள்பட பல்வேறு தரப்பில் இருந்தும் உதவிகள் கிடைக்கின்றன. வரும் நாட்களில் மாலையில், சப்பாத்தி உள்ளிட்டவற்றை மலிவு விலையில் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

# தண்ணீரின்றி வறண்டு மணல் திட்டுகளாக காட்சியளிக்கும் பாலாறு

*மேட்டூர் : பிப். 26-*

*தமிழக - கர்நாடக எல்லையில்உள்ளபாலாறு, தண்ணீரின்றி வறண்டு மணல் திட்டுகளாக காட்சியளிக்கிறது.*

*தமிழக - கர்நாடக எல்லையில் காவிரியின் துணை நதியான பாலாறு அமைந்துள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையில் கனமழை பெய்யும் போது, பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, வெள்ள நீர் அடிப்பாலாறு என்ற இடத்தில் கலப்பது வழக்கமாகும். குறிப்பாக, மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதியான தாமரைக்கரை, தட்டக்கரை, பர்கூர், அந்தியூர் வனப் பகுதியில் பெய்யும் மழை, மேட்டூர் அணைக்கு நீர் ஆதாரமாகவும் இருந்து வருகிறது.*

*இந்நிலையில் மேற்கு தொடர்ச்சி மலையில் மழை குறைந்ததால் பாலாற்றில் கசிவு நீர் மட்டுமே வந்து கொண்டிருந்தது. இந்நிலையில் நீர்வரத்து முற்றிலுமாக நின்று தண்ணீரின்றி வறண்டு மணல் திட்டுகளாக பாலாறு காட்சியளிக்கிறது. ஆற்றையொட்டி சேலம், ஈரோடு மற்றும் கர்நாடக மாநில வனப்பகுதிகள் உள்ளன. இந்த வனப்பகுதியில் யானைகள், மான்கள், காட்டெருமைகள், கரடிகள், மயில்கள் உள்ளிட்ட விலங்குகள் மற்றும் பறவைகள் உள்ளன. இந்நிலையில் வனப்பகுதியில் இருந்து உணவு மற்றும் தண்ணீர் தேடி விலங்குகள்வெளியே வர தொடங்கியுள்ளன.*



*குறிப்பாக யானை, மான் உள்ளிட்ட வனவிலங்குகள் தண்ணீர் தேடி பாலாறு பகுதிக்கு கடந்த சில நாட்களாக வருகின்றன. தற்போது, தண்ணீரின்றி பாலாறு காட்சியளிப்பதால், உணவு மற்றும் தண்ணீர் தேடி ஆற்றையொட்டியுள்ள கோவிந்தப்பாடி,செட்டிப்பட்டி, காரைக்காடு, வனத்தையொட்டியுள்ள எல்லையோர கிராமங்களான தார்க்காடு, தண்டா, நீதிபுரம், லக்கம்பட்டி, மேட்டுக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் வன விலங்குகள் நுழைய வாய்ப்புகள் அதிகமுள்ளன. எனவே, வனத்துறை அதிகாரிகள் தீவிரகண்காணிப்புமற்றும் ரோந்துப் பணிகளை மேற்கொள்ள வேண்டும், என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*இது குறித்து பொதுமக்கள் கூறியதாவது : நடப்பாண்டில் கோடைக்கு முன்பே வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் வனப்பகுதியில் இருந்து வனவிலங்குகள் எல்லையோர கிராமத்துக்கு வந்து செல்கின்றன. கடந்த சில நாட்களாக யானை நடமாட்டமும் உள்ளது. எனவே, கிராமத்துக்குள் வனவிலங்குகள் நுழைவதைத் தடுக்க ரோந்துப் பணிகளை வனத்துறைமேற்கொள்ள வேண்டும். மேலும், வனப்பகுதியில் உள்ள கசிவுநீர் குட்டை பகுதியில் தண்ணீர் நிரப்ப வேண்டும், என்றனர்.*

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# கத்தார் ஓபன் டென்னிஸ் சாம்பியன் பட்டம் வென்றார் கச்சனாவ்



**கத்தார் : பிப். 26,**

**கத்தார் ஓபன் டென்னிஸ் தொடர் கத்தாரில் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழாமை நடந்தது.**

இதில் ரஷிய வீரர் கச்சனாவ், செக் நாட்டு வீரர் ஜாக்குப் மென்சிக்குடன் மோதினார். இதில் கச்சனாவ் 7-6 (14-12), 6-4 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் பெற்று அசத்தினார்.

# துபாய் சாம்பியன்ஷிப் சாம்பியன் பட்டம் வென்றார் பவுலினி



**துபாய் : பிப். 26,**

**துபாய் சாம்பியன்ஷிப் டென்னிஸ் தொடர் துபாயில் நடைபெற்று வருகிறது.**

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் ரஷிய வீராங்கனை அன்னா காலின்ஸ்கயாவுடன், இத்தாலி வீராங்கனை ஜாஸ்மின் பவுலினியுடன் மோதினார். இந்தப்போட்டியில் ஜாஸ்மின் பவுலினி 4-6, 7-5, 7-5 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் பெற்றார். இந்த வெற்றியின் மூலம் தரவரிசையில் 26-வது இடத்தில் இருக்கும் பவுலினி, அடுத்த வாரம் முதல் முறையாக முதல் 20 இடங்களுக்குள் நுழைவார்.

# 3வது போட்டியில் வெற்றி : டி20 தொடரில் நியூசிலாந்தை 3-0 என ஒயிட்வாஷ் செய்தது ஆஸ்திரேலியா




**ஆக்லாந்து : பிப். 26,**

**ஆஸ்திரேலியா அணி நியூசிலாந்தில் பயணம் செய்து 3 டி20 மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.**

முதலில் நடந்த இரு போட்டிகளிலும் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 3வது டி20 போட்டி ஆக்லாந்தில் நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற நியூசிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. மழை காரணமாக 15 ஓவராகக் குறைக்கப்பட்டது.

அதன்படி, முதலில் ஆடிய ஆஸ்திரேலியா 10.4 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 118 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஹெட் 33 ரன்னும், ஷாட் 27 ரன்னும், மெக்ஸ்வெல் 20 ரன்னும் எடுத்தனர். இதையடுத்து, டக்வொர்த் லூயிஸ் முறைப்படி 10 ஓவரில் 126 ரன்கள் எடுத்தால் வெற்றி என நியூசிலாந்து அணிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

தொடக்க வீரர்கள் விரைவில் அவுட்டாகினர். இதனால் நியூசிலாந்து 10 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 98 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 27 ரன்கள் வித்தியாசத்தில் வென்ற ஆஸ்திரேலியா டி20 தொடரை நியூசிலாந்தை 3-0 என ஒயிட்வாஷ் செய்தது. ஆட்ட நாயகனாக மேத்யூ ஷாட்டும், தொடர் நாயகனாக மிட்செல் மார்ஷும் தேர்வாகினர்.

வரலாறு சினிமா

# ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவனுக்கு சர்வதேச விருது அறிவிப்பு



**சென்னை : பிப். 26,**

**இந்தியாவின் சிறந்த ஒளிப்பதிவாளர்களில் ஒருவரான சந்தோஷ் சிவன், தமிழ், மலையாளம், இந்திப் படங்களில் பணியாற்றி வருகிறார்.**

தமிழில், தளபதி, ரோஜா, இருவர், உயிரே, ராவணன், துப்பாக்கி உட்பட பல படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். உருமி உட்பட சில படங்களை இயக்கியுள்ளார். தேசிய விருது உட்பட பல்வேறு விருதுகளை பெற்றுள்ள இவருக்கு, இப்போது பியர் ஆஞ்சனியூஸ் என்ற சர்வதேச விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் திறமையான, ஒட்டுமொத்த ஒளிப்பதிவு பங்களிப்புக்காக வழங்கப்படும் விருது, இது. இந்த விருதை பெறும் முதல் இந்திய ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன் என்பது குறிப்பிடத்தக்கது. மே 24-ம் தேதி பிரான்ஸில் நடைபெறும் கேன்ஸ் திரைப்பட விழாவில் இவ்விருது அவருக்கு வழங்கப்பட இருக்கிறது. இந்த விருதை இதற்கு முன், புகழ்பெற்ற பிரெஞ்சு ஒளிப்பதிவாளர் பிலிம் ரூஸலாட், அமெரிக்க ஒளிப்பதிவாளர் வில்மோஸ் சிக்மண்ட், ரோஜர், கிறிஸ்டோபர் டாய்ல் உட்பட பலர் பெற்றுள்ளனர்.

# என் வயதை தவறாக வெளியிட்ட கூகுள் நிறுவனத்தை கடிந்து கொண்ட நடிகை



**பெங்களூரு : பிப். 26,**

**கூகுள் நிறுவனம் செய்த தவறால் நான் 82 வயது மூதாட்டியாக ஆனதுபோல் உணர்வதாக நடிகை தீபிகா தாஸ் கூறியுள்ளார்.**

கன்னட திரை உலகில் பிரபல நடிகையாக இருந்து வருபவர் தீபிகா தாஸ். இவர் கன்னட பிக்பாஸ் நிகழ்ச்சியிலும் பங்கேற்று ரசிகர்களிடையே பிரபலம் அடைந்தார். இந்த நிலையில் இவர் சமீபத்தில் தனது பிறந்தநாளை கொண்டாடினார். அதையடுத்து தீபிகா தாசுக்கு எத்தனை வயசு என்று ரசிகர்கள் கூகுளில் தேடினர். அப்போது தீபிகா தாசுக்கு வயது 31 என்று வந்தது. இதுபற்றி அறிந்த நடிகை தீபிகா தாஸ் அதிர்ச்சி அடைந்தார். மேலும் அவர் கூகுள் நிறுவனத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'எனக்கு வயது தற்போது 28 தான் ஆகிறது. நான் 1993-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ந் தேதி பிறந்தேன் என்று கூகுளில் தவறான தகவல் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளது.

எனது புகழை கெடுக்கும் வகையில் நடந்து கொண்ட கூகுள் நிறுவனத்தை கண்டிக்கிறேன். கூகுள் நிறுவனம் செய்த தவறால் நான் 82 வயது மூதாட்டியாக ஆனதுபோல் உணர்கிறேன். எனக்கு மனவேதனையாக உள்ளது. நடந்த அனைத்திற்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். அதனால் நான் எனக்கே பிறந்தநாள் வாழ்த்து சொல்லிக் கொள்கிறேன்' என்று பதிவிட்டுள்ளார்.

# ராஞ்சி டெஸ்டில் அஸ்வினின் அதிக முறை 5 விக்கெட் சாதனை இந்திய அணி வெற்றிக்கு 192 ரன்கள் இலக்கு




**ராஞ்சி : பிப். 26,**

**இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற இந்திய அணிக்கு 192 ரன்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

விக்கெட் கீப்பர் துருவ் ஜூரெல் 2 பவுண்டரி ஒரு சிக்சருடன் 30 ரன்களுடனும், குல்திப்யாதவ் 17 ரன்களுடனும் 3ம் நாள் ஆட்டத்தை நேற்று தொடங்கினர். இருவரும் விக்கெட் விழாத வண்ணம் நிதானமாக விளையாடினர். இங்கிலாந்தின் பந்துவீச்சு தாக்குதலை திறம்பட கையாண்டனர். துருவ் ஜூரெல் அரைசதம் கடந்தார். குல்திப் யாதவ் 131 பந்துகளைச் சந்தித்து 2 பவுண்டரிகளுடன் 28 ரன்கள் எடுத்து ஜூரெலுக்கு பக்கபலமாக இருந்தார்.

ஆனால், ஆண்டர்சனின் பந்துவீச்சில் எதிர்பாரதவிதமாக போல்டானார். இக்கூட்டணி 80 ரன்கள் வரை சேர்த்து இந்திய அணியை பரிதாபகரமான நிலையில் இருந்து மீட்டது. இதேபோல் ஆகாஷ் தீப் தன் பங்குக்கு 29 பந்துகளை சந்தித்து 9 ரன்கள் எடுத்து பொறுமை காத்து ஆட்டமிழந்தார். மறுபக்கம், துருவ் ஜூரெல் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தார். ஆனால், 149 பந்துகளுக்கு 6 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் என விளையாடி 90 ரன்கள் எடுத்திருந்த போது டாம் ஹார்ட்லியின் அசாத்திய பந்துவீச்சில் போல்டாகி விக்கெட்டை இழந்தார்.

துருவ் ஜூரெலின் சிறப்பான ஆட்டத்தால் முதல் இன்னிங்சில் 307 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது இந்திய அணி. இதன்மூலம் இங்கிலாந்தை விட 46 ரன்கள் பின்னிலையில் இருந்தது இந்தியா. இங்கிலாந்து தரப்பில் சோயப் பஷீர் 5 விக்கெட், டாம் ஹார்ட்லி 3 விக்கெட், ஆண்டர்சன் 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதன்பின் களமிறங்கிய இங்கிலாந்து அணி வீரர்கள் இந்தியாவின் சுழற்பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சுருண்டனர். தொடர்ச்சியாக விக்கெட்டுகளை இழந்து 145 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அந்த அணியில் அதிகபட்சமாக ஜாக் கிராவ்லி 60 ரன்கள் அடித்தார். பேர்ஸ்டோவ் 30 ரன்கள் எடுத்தார். மற்றவர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி சார்பில் அஸ்வின் 5 விக்கெட், குல்தீப் யாதவ் 4 விக்கெட், ஜடேஜா 1 விக்கெட் கைப்பற்றினர். இதனால் இந்திய அணிக்கு 192 ரன்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இந்திய அணி ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பில்லாமல் 40 ரன்கள் எடுத்துள்ளது. ரோகித் 24 ரன்கள், ஜெய்ஸ்வால் 16 ரன்கள் எடுத்துள்ளனர். இன்னும் 152 ரன்கள் எடுத்தால் வெற்றிபெறுவதோடு டெஸ்ட் தொடரையும் இந்திய அணி கைப்பற்றும்.

இந்த டெஸ்ட் போட்டியின் மூலம் இந்திய மண்ணில் அதிக டெஸ்ட் விக்கெட்டுகள் எடுத்த வீரர் என்ற சாதனையைப் படைத்தார் ரவிசந்திரன் அஸ்வின். இப்போட்டியின் மூலம் இந்திய மண்ணில் 354* டெஸ்ட் விக்கெட்டுகளை அவர் கைப்பற்றியுள்ளனர். அதேபோல், அதிக முறை 5 விக்கெட்கள் வீழ்த்திய இந்திய வீரர் என்ற சாதனையையும் சமன் செய்தார் அஸ்வின்.

# ஒரு டெஸ்ட் தொடரில் அதிக ரன்கள் : ஜாம்பவான்கள் வரிசையில் ஜெய்ஸ்வால்



**ராஞ்சி : பிப். 26,**

**இந்தியாவின் இளம் வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஒரு டெஸ்ட் தொடரில் 600 ரன்களை பதிவுசெய்த 5வது இந்திய வீரர் என்ற புதிய சாதனை படைத்து அசத்தியுள்ளார்.**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இரண்டு இரட்டை சதங்கள், இரண்டு அரை அசதங்களை பதிவுசெய்து அசத்திவரும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் இங்கிலாந்து பவுலர்களை தனியொரு ஆளாக டாமினேட் செய்துவருகிறார்.

அடுத்தடுத்த இரண்டு போட்டிகளில் இரண்டு இரட்டை சதங்களை பதிவுசெய்து சாதனை படைத்த யஷஸ்வி ஜெய்ஸ்வால், தற்போது ஒரு டெஸ்ட் தொடரில் அதிக ரன்களை பதிவுசெய்த இந்திய வீரர் என்ற சாதனையை நோக்கி நகர்ந்துவருகிறார். தற்போது 600 ரன்களை கடந்திருக்கும் யஷஸ்வி, விராட் கோலியின் அதிக ரன்கள் சாதனையை முறியடிக்கும் நிலையில் அருகில் இருக்கிறார்.

இங்கிலாந்துக்கு எதிரான 4வது டெஸ்ட் போட்டியில் 55 ரன்களை கடந்த போது, ஒரு டெஸ்ட் தொடரில் 600 ரன்களை பதிவுசெய்த 5வது இந்திய வீரர் என்ற சாதனையை ஜெய்ஸ்வால் நிகழ்த்தினார். 4 டெஸ்ட் போட்டிகளில் 85 & 15, 209 & 17, 10 & 214*, 73 முதலிய ரன்களை குவித்திருக்கும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் மொத்தமாக 618 ரன்கள் அடித்துள்ளார்.

இதன்மூலம் ஒரு டெஸ்ட் தொடரில் 600 ரன்கள் அடித்த இந்திய வீரர்கள் பட்டியலில், சுனில் கவாஸ்கர், விராட் கோலி, ராகுல் டிராவிட் மற்றும் திலீப் சர்தேசாய் முதலிய நான்கு வீரர்களுக்கு பிறகு 5வது வீரராக இணைந்துள்ளார்.

இந்த பட்டியலில் இரண்டு முறை 700 ரன்களுக்கு மேல் அடித்து சுனில் கவாஸ்கர் (774, 732) முதலிடத்தில் நீடிக்கிறார். விராட் கோலி 3 முறை 600 ரன்களுக்கு மேல் அடித்து (692, 655, 610) இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார். ராகுல் டிராவிட் இரண்டு முறை 600 ரன்களுக்கு மேல் (619, 602) அடித்துள்ளார். விராட் கோலியின் சாதனையை முறியடிக்க இன்னும் 75 ரன்கள் மட்டுமே யஷஸ்வி ஜெய்ஸ்வாலுக்கு மீதமுள்ளது. ஒரு டெஸ்ட் தொடரில் அதிக ரன்கள் அடித்த சர்வதேச வீரர்கள் பட்டியலில் 974 ரன்களுடன் டான் பிராட்மேன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

# ரணம் : திரை விமர்சனம்



**சென்னை : பிப். 26,**

**சென்னையில் மாதவரம் பகுதியில் கண்டெடுக்கப்படும் ஒரு பெண்ணின் சடலத்தை அடையாளம் காண, வரைகலை தெரிந்த சிவாவை (வைபவ்) அழைக்கிறார் காவல் ஆய்வாளர் ராஜேந்திரன்.**

சிவா வரைந்தது, ஒரு மாதத்துக்கு முன் இறந்து அடக்கம் செய்யப்பட்ட ஓர் இளம் பெண்ணின் முகத்துடன் ஒத்துப்போகிறது. இதன் தொடர்ச்சியாகப் புதைக்கப்பட்ட இளம் பெண்களின் சடலங்கள், மர்ம நபர்களால் தோண்டியெடுக்கப்பட்டு கடத்தப்பட்ட வழக்கு, சூடு பிடிக்கிறது. அதை விசாரித்து வந்த ராஜேந்திரன் திடீரென காணாமல் போக, அவரது இடத்துக்கு வருகிறார் தான்யாஹோப். சிவாவின் உதவியுடன் அந்த வழக்கின் பின்னணியில் இருப்பவர்களை அவர் கண்டுபிடித்தாரா இல்லையா என்பது கதை.

பல அடுக்குகளைக் கொண்ட த்ரில்லர் திரைக்கதைக்குள், இரண்டு பின்கதைகள் பொருத்தப்பட்ட விதம் ஈர்க்கிறது. சடலங்களை வைத்து நடைபெறும் குற்றவுலகில், இதுவரை தமிழ்சினிமாவில் பேசப்படாத, அதே நேரம்பேசப்பட வேண்டிய அவலத்தை சற்று விரிவாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் பேசியிருக்கும் அறிமுக இயக்குநர் ஷெரீஃப்புக்கு நல்வரவு கூறலாம்.

காவல் துறைக்கு உதவும் நாயகன்சிவா, பின் கதையில் வரும் மருத்துவச் செவிலியர் கல்கி ஆகிய இரண்டு முதன்மைக் கதாபாத்திரங்கள் எழுதப்பட்ட விதம் நேர்த்தி. அக்கதாபாத்திரங்களுக்கு கச்சிதமாகவும் பொருத்தமாகவும் நடிப்பைக் கொடுத்திருக்கும் வைபவ், நந்திதா ஸ்வேதா இருவரும் கதையை தங்கள்தோள்களில் சுமந்திருக்கிறார்கள். காவல் ஆய்வாளராக வரும் தான்யாஹோப் காக்கி உடையில் கம்பீரமாக இருக்கிறாரே தவிர, 'ஸ்கோப்' இருந்தும் தட்டையான முகபாவங்களுடன் அதைக் கோட்டை விட்டிருக்கிறார். ஏனைய துணைக் கதாபாத்திரங்களில் நடித்திருக்கும் ஒவ்வொருவரும் பொறுப்பைக் கச்சிதமாக நிறைவேற்றி இருக்கிறார்கள்.

பகல் காட்சிகள், இரவு நேரக் காட்சிகள், பின் கதைகள் என அனைத்திலும் தனது ஒளிப்பதிவு மூலம் கதைக் களத்துக்கு நம்மை இழுத்துக்கொள்கிறார் பாலாஜி கே.ராஜா. அரோல் கரோலியின் பின்னணி இசை திரைக்கதையின் வேகத்துக்கும் காட்சிகள் விடுவித்துச் செல்லும் விடைகளுக்கும் ஈடுகொடுத்து ஒலிக்கிறது. முதல் பாதியில் பல இடங்களில் படத்தொகுப்பாளர் கத்தரி வைத்திருக்கலாம்.

சில இடங்களில் துருத்தி நிற்கும் தர்க்கப் பிழைகள், நாயகனையே மாதவரம் காவல் நிலையம் பெரிதும் நம்பியிருப்பது போன்ற குறைகளை மீறி, பேசப்படாத பொருளை சமூக அக்கறையுடன் பேசியிருக்கும் 'ரணம்' ரசிக்கத் தக்க முயற்சி.

# கதைக் கேட்க மறுத்த ஹீரோக்கள் : 'டபுள் டக்கர்' இயக்குநர் வருத்தம்



**சென்னை : பிப். 26,**

**இந்தியாவிலேயே முதல்முறையாக புதுமையாக வடிவமைக்கப்பட்டுள்ள அனிமேஷன் பாத்திரங்களுடன் தீரஜ், ஸ்மிருதி வெங்கட், கோவை சரளா, எம்.எஸ்.பாஸ்கர் உட்பட பலர் நடித்துள்ள ஃபேன்டசி ஆக்ஷன் படம் 'டபுள் டக்கர்'. மீரா மஹதி இயக்கியுள்ள இந்தப் படத்தை ஏர் ஃபிளிக் நிறுவனம் தயாரித்துள்ளது. வித்யாசாகர் இசை அமைத்துள்ளார். இதன் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நடந்தது.**

படத்தின் இயக்குநர் மீரா மஹதி கூறியதாவது: யாரிடமும் உதவி இயக்குநராகப் பணியாற்றாமல் குறும்படங்கள் இயக்கிய அனுபவத்தில் இந்தப்படத்தை இயக்கி இருக்கிறேன். வளர்ந்துவரும் நாயகர்கள் சிலரிடம் கதை சொல்ல முயன்றேன். அவர்கள் யாரும் குறைந்தபட்ச மரியாதையைக் கூட கொடுக்கவில்லை. 5 நிமிடம் மட்டும் கொடுங்கள் என்றேன். யாரும் கொடுக்க முன்வரவில்லை. பிறகு மைம் கோபி சார் தான் தீரஜிடம் அறிமுகம் செய்து வைத்தார். அவர் 5 நிமிடத்தில் என்னை இம்ப்ரஸ் செய்ய முடியுமா? என்று கேட்டார்.

கதை சொல்லத் துவங்கினேன். முடிக்கும் போது ஒரு மணி நேரம் ஆகியிருந்தது. ஆரம்பிக்கும் போது சிறிய படமாகத்தான் இருந்தது. படத்தில், வரும் அனிமேஷன் பகுதிகளை ஏற்கெனவே மனதில் டிசைன் செய்து வைத்திருந்தேன். பிறகு தீரஜ் சார், இது சூப்பராக ஒர்க்-அவுட் ஆகும், கண்டிப்பாக பெரிய அளவில் செய்வோம் என்று கூறி படத்தின் பட்ஜெட்டை எட்டு மடங்காக உயர்த்திவிட்டார் என்று மீரா மஹதி கூறினார். மிஷ்கின், நடிகர் தீரஜ், இணை தயாரிப்பாளர் சந்துரு மற்றும் படக்குழுவினர் பேசினர்.

# குஷி ஜோதிகாபோல் மாறிய ஜோவிகா – கவர்ச்சியில் இறங்கிய வனிதா மகள்



**சென்னை : பிப். 26,**

**சேலையை முறுக்கி கட்டி, இடுப்பழகு தெரிய நடிகை வனிதாவின் மகள் ஜோவிகா நடத்திய கிளாமர் போட்டோஷூட் வைரல் ஆகி வருகிறது.**

நடிகர் விஜயகுமாரின் மகளான வனிதா, தந்தையுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக குடும்பத்தினரை பிரிந்து தற்போது மகள்களுடன் தனியாக வசித்து வருகிறார். வனிதாவுக்கு ஜோவிகா, ஜெயனிகா என இரு மகள்கள் உள்ளனர்.

வனிதாவின் மூத்த மகள் ஜோவிகா, படிப்பில் ஆர்வம் இல்லாததால் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திவிட்டார். இதையடுத்து சினிமாவில் ஹீரோயின் ஆவதற்காக மும்பையில் உள்ள ஆக்டிங் ஸ்கூலில் சேர்ந்து படித்துள்ளார். ஆக்டிங் ஸ்கூலில் படித்து முடித்ததும் இயக்குனர் பார்த்திபனிடம் உதவி இயக்குனராக சேர்ந்து பணியாற்றி வருகிறார் ஜோவிகா. அண்மையில் நடந்து முடிந்த பிக்பாஸ் நிகழ்ச்சிதான் ஜோவிகாவுக்கு புகழ் வெளிச்சத்தை கொடுத்தது. இந்நிகழ்ச்சியில் பரபரப்பாக பேசப்பட்ட போட்டியாளர்களில் ஜோவிகாவும் ஒருவர்.

இருப்பினும் அவரால் இறுதிவரை செல்ல முடியவில்லை. பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு பின்னர் ஜோவிகாவுக்கு ஹீரோயினாக நடிக்கவும் வாய்ப்புகள் வந்துள்ளதாக கூறப்படுகிறது. முதற்கட்டமாக விதவிதமாக ஜோவிகாவை வைத்து போட்டோஷூட் நடத்தி உள்ளார் வனிதா விஜயகுமார். அதில் சேலையில் இடையழகு தெரிய செம்ம கிளாமராக போஸ் கொடுத்தபடி ஜோவிகா நடத்தியுள்ள போட்டோஷூட் வைரலாகி வருகிறது. சேலையில் கிளாமராக போஸ் கொடுத்துள்ளதை பார்க்கும் போது குஷி ஜோதிகா போல் ஜோவிகா இருப்பதாக இணையதள வாசிகள் கமெண்ட் செய்து வருகின்றனர்.



**மரணம் பற்றிய பயமில்லை- தமன்னா :** இறப்பு என்பதை மனிதர்களாகிய நாம் என்றாவது ஒரு நாள் எதிர் கொண்டு தான் ஆக வேண்டும். அதனால் அதை கண்டு நாம் அச்சப்பட தேவையில்லை. இருப்பினும் என்னுடைய பெற்றோர் மற்றும் என்னுடைய அன்புக்குரியவர்கள் இழப்பு பற்றிய பயம் எனக்கு உள்ளது. மக்கள் நம்மை விட்டு பிரிந்து செல்வதை பார்ப்பது எளிதான விஷயம் அல்ல என்று கூறினார்.



வரலாறு உலகம்

# அதிபர் வேட்பாளர் போட்டியில் டிரம்ப் முன்னிலை



**வாஷிங்டன் : பிப். 26,**

**குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளர் போட்டியில் டிரம்ப் முன்னிலையில் உள்ளார்.**

அமெரிக்காவில் இந்த ஆண்டு இறுதியில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய அதிபர் ஜோ பைடன் மீண்டும் போட்டியிட உள்ளார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட முன்னாள் அதிபர் டிரம்ப் களம் இறங்கியுள்ளார். அக்கட்சியின் வேட்பாளர் தேர்வில், டிரம்புக்கு அதிக ஆதரவு உள்ளது. எனவே, அதிபர் தேர்தலில் டிரம்ப் போட்டியிடுவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. அவர் போட்டியிட்டால் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அதிகம் என கருத்துக்கணிப்புகளும் கூறி வருகின்றன.

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் பதவிக்கு இந்தாண்டு தேர்தல் நடைபெற உள்ள நிலையில் குடியரசுக் கட்சி சார்பில் வேட்பாளர் தேர்வுக்கான தேர்தலில் தெற்கு கரோலினா மாகாணத்தில் முன்னாள் அதிபர் டிரம்ப் வெற்றி பெற்றுள்ளார். இந்திய வம்சாவளியான முன்னாள் மாகாண கவர்னர் நிக்கி ஹாலே மற்றும் டிரம்ப் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

# தனது கணவரின் உடலை ஒப்படைக்க புதின் மறுப்பதாக

## நவால்னியின் மனைவி குற்றச்சாட்டு



**மாஸ்கோ : பிப். 26.**

**என் கணவரின் உடலை எங்களிடம் கொடுங்கள் என ரஷிய அதிபருக்கு நவால்னியின் மனைவி கோரிக்கை வைத்துள்ளார்.**

ரஷிய எதிர்க்கட்சி தலைவரும், அதிபர் புதினின் தீவிர எதிர்ப்பாளருமான அலெக்சி நவால்னி ஊழல் வழக்கில் 19 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு ஆர்க்டிக் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த வாரம் அவர் சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்தார். நவால்னியின் மரணத்துக்கு அதிபர் புதினே காரணம் என பல்வேறு தரப்பிலும் குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால் புதின் அரசு அதை திட்டவட்டமாக மறுத்து வருகிறது.

இந்த நிலையில் சிறையில் உயிரிழந்த தனது கணவரின் உடலை ஒப்படைக்க புதின் மறுப்பதாக நவால்னியின் மனைவி யூலியா நவால்னயா குற்றம் சாட்டியுள்ளார். பேட்டி ஒன்றில் இது தொடர்பாக அவர் கூறியதாவது:- நவால்னியின் தாயார், தனது மகனின் உடலை தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென விரும்புகிறார். ஆனால் அதிகாரிகள் நவால்னி உடலை ஆர்க்டிக் சிறையிலேயே அடக்கம் செய்ய ஒப்புக்கொள்ளும்படி அவரது தாயை அச்சுறுத்துகின்றனர். உடல் சிதைந்து வருவதால், முடிவெடுக்க அதிக நேரம் இல்லை என கூறி அதிகாரிகள் நெருக்கடி கொடுக்கின்றனர்.

என் கணவரின் உடலை எங்களிடம் கொடுங்கள். நீங்கள் அவர் உயிருடன் இருந்தபோது அவரை சித்ரவதை செய்தீர்கள். இப்போது அவர் இறந்த பிறகும் தொடர்ந்து சித்ரவதை செய்கிறீர்கள். இதன் மூலம் இறந்துபோனவரின் உடலை நீங்கள் கேலி செய்கிறீர்கள் என்று கூறினார்.

# காய்ச்சல் காரணமாக போப் பிரான்சிஸ் பங்கேற்க இருந்த நிகழ்ச்சிகள் ரத்து



**ரோம் : பிப். 26,**

**போப் பிரான்சிஸ் (87) லேசான காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அவர் பங்கேற்க இருந்த நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன என வாடிகன் தேவாலயம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக வாடிகன் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், லேசான காய்ச்சல் காரணமாக போப் பிரான்சிஸ் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் அவரது அன்றாட நிகழ்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அவரது உடல்நிலை சீராக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கிறிஸ்தவர்கள் ஆறுதல் அடைந்துள்ளதோடு விரைவில் உடல்நலம் பெற பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு ஜூலை மாதம் ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் போப் பிரான்சிசுக்கு குடலிறக்கத்தை சரி செய்வதற்கான அறுவை சிகிச்சை நடந்தது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் தீ விபத்தில் சிக்கி இந்திய இளைஞர் பலி



**நியூயார்க் : பிப். 26,**

**அமெரிக்காவில் நியூயார்க் நகரில் கடந்த 2023-ம் ஆண்டில் 267 தீ விபத்து சம்பவங்கள் நடந்துள்ளன.**

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஹார்லெம் பகுதியில் செயின்ட் நிகோலஸ் பிளேஸ் என்ற குடியிருப்பு ஒன்று உள்ளது. இதில், திடீரென லித்தியம் பேட்டரி ஒன்று வெடித்ததில் தீ விபத்து ஏற்பட்டு உள்ளது. கட்டிடம் முழுவதும் தீப்பற்றி பரவியது.

இதனால், அந்த கட்டிடத்தில் இருந்தவர்கள் கீழே குதித்து தப்பியோடினர். இதில், 17 பேர் வரை காயமடைந்து உள்ளனர். எனினும், பாசில் கான் (வயது 27) என்ற இந்திய இளைஞர் தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துவிட்டார். இதனை நியூயார்க் நகரில் உள்ள இந்திய தூதரகம் உறுதி செய்துள்ளது. தொடர்ந்து அவரின் குடும்பத்தினருக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்ய தயாராக உள்ளோம் என்றும் தெரிவித்து உள்ளது.

இவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்குரிய வகையில் உள்ளது. இதுபற்றி காவல் ஆய்வாளர்கள், தீயணைப்பு வீரர்கள் மற்றும் நகர அதிகாரிகள் விசாரணை செய்து வருகின்றனர். கடந்த 2023-ம் ஆண்டில் 267 தீ விபத்து சம்பவங்கள் நடந்துள்ளன. 150 பேருக்கு காயங்கள் ஏற்பட்டு உள்ளன. 18 பேர் உயிரிழந்து உள்ளனர் என நியூயார்க் தீயணைப்பு துறை தெரிவித்து உள்ளது. நடப்பு ஆண்டில் 24 தீயணைப்பு சம்பவங்கள் பற்றி விசாரணை நடந்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# அமெரிக்காவில் கூகுள் பே சேவை

## ஜூன் முதல் நிறுத்தம் : அதிர்ச்சியில் பயனாளர்கள்




**வாஷிங்டன் : பிப். 26,**

**கூகுள் நிறுவனத்தின் பே ஆப் என்ற செயலி உலகம் முழுவதும் இயங்கி வருகிறது. யுபிஐ மூலம் பரிவர்த்தனைகள் நடைபெறுவதால் பயனாளர்களின் செல்போன் எண் இருந்தாலே அவர்களுக்கு பணம் அனுப்பவும், அவர்களிடமிருந்து பணத்தைப் பெறவும் முடிகிறது.**

இந்தச் செயலியை உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கானோர் பயன்படுத்தி வருகிறார்கள். இந்தியாவிலும் இந்த செயலி இல்லாத செல்போன்களே இல்லை என்னும் அளவுக்கு இதன் பயன்பாடு உள்ளது. டீக்கடை முதல் பெரிய மால்கள் வரை அனைத்து இடங்களிலும் கூகுள் பே பயன்பாடு அதிகரித்துள்ளது. அமெரிக்காவிலும் லட்சக்கணக்கானோர் கூகுள் பே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், வரும் ஜூன் மாதம் 4-ம் தேதி முதல் அமெரிக்காவில் கூகுள் பே வசதி நிறுத்தப்படும் என கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. அமெரிக்காவில் மட்டும்தான் இந்த சேவை நிறுத்தப்படுகிறது. இந்தியா உள்பட அனைத்து நாடுகளிலும் வழக்கம்போல் அந்த சேவை பயன்பாட்டில் இருக்கும். கூகுள் பே செயலி சேவை நிறுத்தப்பட்டாலும் அதில் உள்ள வசதிகளை கூகுள் வாலட்டில் பயன்படுத்திக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கூகுள் பே ஆப்பை விட கூகுள் வாலட்டின் பயன்பாடு அமெரிக்காவில் மிக அதிகமாக இருப்பதால்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. கூகுள் நிறுவனத்தின் இந்த திடீர் அறிவிப்பு அமெரிக்கர்களுக்கு அதிர்ச்சி தரும் வகையில் அமைந்துள்ளது.

## செங்கடல் தாக்குதலுக்கு பதிலடி

# ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா தாக்குதல்



**சனா : பிப். 26,**

**செங்கடல் தாக்குதலுக்கு பதிலடியாக ஏமனில் செயல்பட்டுவரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக ஹமாஸ் மீது போர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேலுக்கும், ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கும் இடையேயான போர் 3 மாதங்களுக்கு மேல் நீடித்து வருகிறது.

இந்த போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குழு ஆதரவு அளித்து வருகிறது. மேலும், செங்கடல் வழியாக இஸ்ரேல் மற்றும் இஸ்ரேலின் ஆதரவு நாடுகளுக்கு செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக, ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நிலைகளை குறிவைத்து அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து மீண்டும் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளன. ஏமனில் 18க்கும் மேற்பட்ட பகுதிகளில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஆயுதக்கிடங்குகள் உள்ளிட்ட இலக்குகளை குறிவைத்து வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலால் மத்திய கிழக்கு பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

# கருப்பின வாக்காளர்கள் குறித்த

## டிரம்ப் பேச்சிற்கு ஹாலே கண்டனம்



**அமெரிக்கா : பிப். 26,**

**2024 வருட இறுதியில் அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது.**

குடியரசு கட்சியின் சார்பில் முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் ஜனநாயக கட்சியின் சார்பில் தற்போதைய அதிபர் ஜோ பைடன் ஆகியோர் களமிறங்கி உள்ளனர். குடியரசு கட்சி சார்பில் தெற்கு கரோலினாவின் முன்னாள் கவர்னர் நிக்கி ஹாலே, டிரம்பிற்கு போட்டியாக, தனக்கு ஆதரவு கோரி பிரசாரம் செய்து வருகிறார்.

தற்போது நிலவும் சூழலில் அமெரிக்காவில் குடியரசு கட்சியினரின் ஆதரவு டொனால்ட் டிரம்பிற்கே அதிகமாக உள்ளது. ஆனால், நிக்கி ஹாலே போட்டியில் இருந்து பின்வாங்கவில்லை. இந்நிலையில், தெற்கு கரோலினாவில் தனது கட்சியினரிடம் ஆதரவு கோரி பிரசாரம் செய்யும் போது கருப்பின மக்கள் குறித்து டொனால்ட் டிரம்ப் சில கருத்துகளை தெரிவித்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது: கருப்பின மக்களுக்கு என்னை பிடிக்கும். என்னை போலவே அவர்களும் வஞ்சிக்கப்பட்டனர். நான் பாதிக்கப்பட்டது போல அவர்களும் பாதிக்கப்பட்டதால் அவர்கள் என்னை தங்களில் ஒருவனாக பார்க்கின்றனர்.

என்னை காவலில் எடுத்து போது வெளியிடப்பட்ட எனது "மக் ஷாட்" புகைப்படம் அவர்களை மிகவும் கவர்ந்துள்ளது. ஏனெனில், பிறரை காட்டிலும் கருப்பின மக்கள் அதிகமாக அது போல் காவல்துறையினரால் புகைப்படம் எடுக்கப்பட்டவர்கள் என்று டிரம்ப் தெரிவித்தார். ஆனால், டிரம்பின் இந்த கருத்தை நிக்கி ஹாலே விமர்சித்துள்ளார். இது குறித்து நிக்கி ஹாலே தெரிவித்ததாவது: கருப்பின மக்களை இவ்வாறு அருவெறுக்கத்தக்க வகையில் பேசியதை கண்டிக்கிறேன். டிரம்பை மனம் போன போக்கில் பேச விட்டால் இதுதான் நடக்கும்.

பொதுத் தேர்தல் முடியும் வரை அவரிடமிருந்து இது போன்ற பேச்சுக்களும், குழப்பங்களும் அதிகம் வரும். இது போன்ற பேச்சுக்கள் குடியரசு கட்சியின் வெற்றி வாய்ப்பை தகர்த்து விடும். அதனால்தான் டிரம்பால் ஒரு பொதுத்தேர்தலை கூட வெல்ல முடியாது என கூறி வருகிறேன் என்று ஹாலே கூறினார். நிக்கி ஹாலேவை போல், "தன் மேல் உள்ள வழக்குகளால் கருப்பின மக்கள் அவரை விரும்புவார்கள் என டிரம்ப் கூறுவது அவர்களை அவமானப்படுத்துவது போல் உள்ளது" என ஜனநாயக கட்சியினரும் கண்டனம் தெரிவித்தனர்.

# பாகிஸ்தான் : 2024—ல் கராச்சியில் சிறுமி உள்பட 26 பேர் பலி – பகீர் தகவல்



**கராச்சி : பிப். 26,**

**வீட்டு வாசலில் தந்தையுடன் இருந்த 2 வயது சிறுமி கடந்த வெள்ளிக்கிழமை சுட்டு கொல்லப்பட்ட அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.**

பாகிஸ்தானில் பொருளாதார சரிவு, விலைவாசி உயர்வு என மக்கள் பல்வேறு துயர்களை எதிர்கொள்ள முடியாமல், சிக்கி தவித்து வருகின்றனர். கடந்த இரு வாரங்களுக்கு முன் 8-ந்தேதி அந்நாட்டில் பொது தேர்தல் நடந்து முடிந்தது. எனினும், அதிகாரப்பூர்வ ஆட்சி அமையாமல் இழுபறி நிலையே காணப்படுகிறது. இந்த சூழலில், நடப்பு ஆண்டு தொடங்கியதில் இருந்து பாகிஸ்தானின் கராச்சி நகரில் இதுவரை 26 பேர் தெருக்களில் நடைபெறும் குற்ற சம்பவங்களில் சிக்கி உயிரிழந்து உள்ளனர்.

இதுபற்றி கண்காணிப்பாளர்கள் மற்றும் உயிர்தப்பியவர்கள் கூறும்போது, கராச்சி நகரில் தெருக்களில் நடைபெறும் குற்ற சம்பவங்களை கட்டுப்படுத்த முடியாமல் மக்கள் தவறி விட்டனர். தெருக்களில் காவல் அதிகாரிகள் இருந்தபோதும் கூட, கொள்ளைக்காரர்கள் நகரம் முழுவதும் கட்டுப்பாடின்றி சுற்றி திரிந்து வருகின்றனர் என கூறினர். காவலர்கள் திறமையற்றவர்களாக உள்ளனர் என்றும் அவர்களை பணி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் மக்கள் கோரி வருகின்றனர்.

தனியார் செய்திநிறுவனம் வெளியிட்ட செய்தியில், நகரில் ஒவ்வொரு நாளும் சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்கெட்டு வருகிறது. இதில், கொராங்கி பகுதியில் கடந்த வெள்ளிகிழமை வீட்டு வாசலில் தந்தையுடன் இருந்த 2 வயது சிறுமி சுட்டு கொல்லப்பட்ட அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது. கடந்த 2 நாட்களில் 3 பேர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் உள்ளனர். கொள்ளை சம்பவங்களை தடுக்கும்போது இந்த குற்ற செயல்கள் நடந்துள்ளன. கடந்த சில ஆண்டுகளாகவே, கராச்சி நகரில் தெருக்களில் நடைபெறும் குற்ற சம்பவங்கள் அதிகரித்து உள்ளன. தெருக்களில் மொபைல் போன்களை பறித்து செல்லுதலில் தொடங்கி, கார்கள் மற்றும் மோட்டார் பைக்குகள் ஆகியவற்றையும் அபகரித்து செல்கின்றனர்.

போதிய காவல் துறை பலம் இல்லாதது, காவல் துறையில் அரசியல் தலையீடு ஆகியவை தெருவோர குற்ற சம்பவங்கள் அதிகரிப்புக்கு காரணங்களாக அமைந்து விட்டன என கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர். இதனால், தகுதி வாய்ந்த 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அதிகாரிகளை பணியில் அரசு சேர்க்க வேண்டிய தேவை உள்ளது என கூறப்படுகிறது.

# தேசியக்கொடியை சாத்தான் என குறிப்பிட்ட மதபோதகர் 12 மணிநேரத்தில் நாட்டை விட்டு வெளியேற்றம்



**பாரிஸ் : பிப். 26,**

**கைது செய்யப்பட்ட 12 மணிநேரத்தில் மதபோதகர் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.**

துனிசியா நாட்டை சேர்ந்த இஸ்லாமிய மதபோதகர் மஜுப் மஜுபி (வயது 52). துனிசியாவை சேர்ந்த இவர் 1980ம் ஆண்டு முதல் பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகிறார். இவருக்கு 5 பிள்ளைகள் உள்ளனர். இதனிடையே, பிரான்ஸ் தேசியக்கொடியை சாத்தான் என குறிப்பிட்டு மதபோதகர் மஜுப் மஜுபி பேசிய வீடியோ சமூகவலைதளத்தில் வைரலானது. மேலும், பிரான்சின் நெறிமுறைகளை எதிர்க்க இஸ்லாம் ஊக்குவிப்பதாகவும், பெண்களுக்கு எதிரான நிலைப்பாட்டுடனும், யூத சமூகத்தினரை எதிரிகளாக சித்தரித்தும் மஜுப் பேசும் வெறுப்புப்பேச்சு வீடியோ சமூகவலைதளத்தில் வைரலானது.

இந்நிலையில், பிரான்ஸ் தேசியக்கொடியை சாத்தான் என விமர்சித்த மதபோதகர் மஜுப் மஜுபியை போலீசார் கடந்த வியாழக்கிழமை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சில மணிநேரங்களில் மஜுபியின் குடியுரிமை ரத்து செய்யப்பட்டது. பின்னர், 12 மணிநேரத்தில் மதபோதகர் மஜுப் மஜுபி துனிசியாவுக்கு நாடுகடத்தப்பட்டார். பாரிசில் இருந்து விமானம் மூலம் துனிசியாவுக்கு மஜுபி நாடுகடத்தப்பட்டார். அதேவேளை, பிரான்ஸ் அரசின் நடவடிக்கையை எதிர்த்து மஜுபி அந்நாட்டு கோர்ட்டில் வழக்கு தொடர உள்ளார்.

# உக்ரைன் மக்களின் மனஉறுதியை பாராட்டுகிறேன் : மன்னர் மூன்றாம் சார்லஸ்



**பிரிட்டன் : பிப். 26,**

**கடந்த 2022 பிப்ரவரி 24 அன்று, தனது அண்டை நாடான உக்ரைனை, ரஷியா, "சிறப்பு ராணுவ நடவடிக்கை" எனும் பெயரில் ஆக்கிரமித்தது. இதனை எதிர்த்து உக்ரைன், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் தீவிரமாக போரிட்டு வருகிறது.**

நேற்று முன்தினம் சனிக்கிழமையுடன், ரஷிய-உக்ரைன் போர் தொடங்கி 2 ஆண்டுகள் நிறைவடைந்தது. ஆனால், தற்போது வரை போர் நிற்பதற்கான அறிகுறிகள் இல்லை. போர்நிறுத்தம் குறித்து உலக நாடுகள் மற்றும் ஐ.நா. சபை அமைப்பினர் விடுத்த கோரிக்கைகளை ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் புறக்கணித்து விட்டார்.

இப்பின்னணியில், உக்ரைனுக்கு அமெரிக்காவில் இருந்து கிடைத்து வந்த நிதியுதவிகள் தொடர்ந்து கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆனால், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், உக்ரைனுக்கு நிதியுதவி தொடர்ந்து அளிக்க போவதாக உறுதியளித்தார். இந்நிலையில், இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸ், உக்ரைனை குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

மன்னர் சார்லஸ் தெரிவித்திருப்பதாவது: எந்தவித முன்னறிவிப்போ, தூண்டுதலோ இன்றி ஒரு தாக்குதலை உக்ரைன் சந்தித்தது. அந்நாட்டு மக்கள் வார்த்தையில் விவரிக்க முடியாத அளவு துன்பத்தையும், அடக்குமுறையையும் சந்தித்து வருகின்றனர். இங்கிலாந்து மற்றும் அதன் நட்பு நாடுகள் உக்ரைனுக்கு தொடர்ந்து அளித்து வரும் உதவிகளை வரவேற்கிறேன். இங்கிலாந்தில் உக்ரைன் வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ராணுவ பயிற்சியையும் பாராட்டுகிறேன்.

அத்தியாவசிய பொருட்களுக்கு கூட தட்டுப்பாடு நிலவுகின்ற நேரத்தில் உக்ரைன் மக்களுக்கு சர்வதேச நாடுகள் உதவுவது பாராட்டத்தக்கது. மிகவும் நெருக்கடியான காலகட்டத்திலும் உக்ரைன் மக்கள் அசாத்திய மன உறுதியையும், வீரத்தையும் காட்டி வருவதை பாராட்டுகிறேன் என்று மன்னர் சார்லஸ் தெரிவித்தார்.

பிப்ரவரி 6 அன்று மன்னர் சார்லசுக்கு புற்று நோய் இருப்பதாக கண்டறியப்பட்டதும், அவர் பூரண நலம் பெற உலகெங்கும் உள்ள மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரபலங்கள் அவருக்கு செய்தி அனுப்பி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் காலத்தை முன்னிட்டு 3 மாதங்களுக்கு "மன் கி பாத்" நிகழ்ச்சி கிடையாது





# தூத்துக்குடியில் மின் வாகன தொழிற்சாலை முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்

# வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவோம் : ஓபிஎஸ்




சென்னை / புதுக்கோட்டை | 26.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

26.02.2024 திங்கள்

# வரலாற்றில் இன்று




## இன்றைய பிறந்த நாள்

கோபால் சுவரூப் பதக் , இந்தியாவின் 4வது குடியரசுத் துணைத் தலைவர் (பி.1896) (இ.1982)



தாராபாரதி , தமிழகக் கவிஞர் (பி.1947) (இ.2000)



தங்கேஸ்வரி கதிராமன் , இலங்கை வரலாற்றாளர், எழுத்தாளர், அரசியல்வாதி (பி.1952) (இ.2019)



## இன்றைய நினைவு நாள்

ஆனந்தி கோபால் ஜோஷி , இந்திய மருத்துவர் (பி.1865) (இ.1887)



வினாயக் தாமோதர் சாவர்க்கர் , இந்தியக் கவிஞர், அரசியல்வாதி (பி.1883) (இ.1966)



எசு. பி. சவாண் , இந்திய அரசியல்வாதி (பி.1920) (இ.2004)



## விடுதலை நாள் (குவைத்)